www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூன் 2011
ரூ. 7.00




## ஜெயா திருந்திவிட்டாராம்!

# நரியைப் பரியாக்கும் கோயபல்சுகள்!

படிப்பகம்

www.padippakam.com



தருமபுரியில்...

# “போர்க்குற்றவாளி ராஜபக்சேவைத் தூக்கிலிடு!”

## - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம்

ஈராண்டுகளுக்கு முன்பு நடந்த இறுதிக்கட்ட ஈழப் போரில், 2009, மே 18-ஆம் நாளில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்களைக் கொன்றொழித்ததோடு, இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை இன்னமும் முட்கம்பியிடப்பட்ட தடுப்பு முகாம்களில் அடைத்து வதைத்து வரும் இன அழிப்புப் போர்க்குற்றவாளி ராஜபக்சேவைத் தண்டிக்குமாறும், இனப்படுகொலைப் போரை வழிகாட்டி இயக்கிய இந்திய மேலாதிக்க அரசையும் சோனியா - மன்மோகன் கும்பலையும் திரைகிழித்தும், ஈழ மக்களது சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் மே -18 முள்ளிவாய்க்கால் படுகொலை நாளில் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

முள்ளிவாய்க்கால் படுகொலை நாளையொட்டி துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் வாயிலாக விரிவான பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக சென்னை, பென்னாகரம், பள்ளிப்பாளையம், உடுமலை, கோத்தகிரி, கோவை, விழுப்புரம், கடலூர், புதுச்சேரி, சீர்காழி, தஞ்சை, திருச்சி, மதுரை, கோவில்பட்டி, விளாத்திகுளம், சிவகங்கை - எனத் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் இவ்வமைப்புகள் தோழமை அமைப்புகளுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

திருச்சி புத்தூர் நாலுரோட்டில் மே-18 அன்று மாலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் சார்பாக, ஐ.நா.சபையை நைனா சபையாக எள்ளி நகையாடும் ‘‘ஐ.நா. மன்றத்தின் விசாரணை’’ என்ற வீதி நாடகம் நடத்தப்பட்டது. ராஜபக்சேவின் திமிர்த்தனத்தையும் ஒபாமாவுக்குக் கூழைக் கும்பிடு போடும் மன்மோகன் சிங்கையும் அம்பலப் படுத்தும் வகையில் அமைந்த இந்நாடகமும் புரட்சிகரப் பாடல்களும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

கோவையில்...



ராஜபக்சேவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவளித்துவரும் இந்தியாவும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் குற்றவாளிகள் என்பதையும், இந்திய அரசு தேசிய இனப் போராட்டங்களை ஒடுக்கிவருவதையும், தமிழகத்தில் ஏற்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 8
ஜூன் 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

# ஜெயா திருந்திவிட்டாராம்! நரியைப் பரியாக்கும் கோயபல்சுகள்

தமிழகத்தின் பதினான்காவது சட்டப் பேரவைக்கான பொதுத்தேர்தல்களில், கருணாநிதியின் தி.மு.க.வைத் தோற்கடித்து நிராகரிப்பதற்கு எந்த அளவு தகுதியான காரணங்கள் இருந்தனவோ, அதுபோல ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க.வைத் தேர்ந்தெடுத்து ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கக் கூடாது என்பதற்கும் காரணங்கள் இருந்தன.

அரசாட்சிக் காலத்தில் இப்படி நடந்ததாகக் கதைகளில் படித்திருக்கிறோம். அதாவது, ஆண்ட முடிமன்னருக்குத் தகுதியான பரம்பரை வாரிசு இல்லாமல் போனால் பட்டத்து யானையிடம் மாலையைக் கொடுத்து வீதியில் அனுப்புவார்களாம்; பட்டத்து யானை யாருக்கு மாலை போடுகிறதோ ,அவனையோ, அவளையோ அரசராகவோ, அரசியாகவோ மகுடம் சூட்டி விடுவார்களாம். அதைப்போல, பெரும்பாலான நாட்கள் குளுகுளுமலையின் கொடநாட்டு வெள்ளை மாளிகையில் உல்லாசமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஜெயலலிதாவுக்கு காரணமே இல்லாத திடீர் வாய்ப்பாக ஆட்சியதிகாரத்தைக் கொடுத்துவிட்டார்கள், தமிழக வாக்காளர்கள்.

கருணாநிதியின் தி.மு.க. போல பரம்பரை அரசியல் வாரிசு இல்லை என்பதற்காக ஜெயலலிதாவின் கழுத்தில் வெற்றிமாலை விழவில்லை. கருணாநிதியின் தயாளு வழி, ராஜாத்தி வழி பரம்பரை அரசியல் வாரிசுகள் மட்டுமில்லை; ஈரோட்டுப் பெரியசாமி, தூத்துக்குடி பெரியசாமி, சேலம் - வீரபாண்டி ஆறுமுகம், விழுப்புரம் பொன்முடி, தஞ்சை டி.ஆர்.பாலு, திருச்சி நேரு முதலானவர்களின் பரம்பரை அரசியல் வாரிசுகள், அவர்களின் அடாவடியான சொத்துக் குவிப்பு, அதிகார ஆதிக்கம் ஆகியவற்றைத் தமிழக மக்கள் கண்கூடாகக் கண்டனர். கருணாநிதியின் குடும்ப அரசியல் வாரிசுகளுக்குப் பதவிகளைப் பெற்றுத் தருவதற்கும், அவர்களின் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள் முதலிய நலன்களைப் பாதுகாப்பதற்கும் வேண்டி மத்தியில் சோனியா - மன்மோகன் - சிதம்பரம் - பிரணாப் கும்பலுடன் துரோகத்தனமான சமரசங்கள், அடிவருடித்தனங்களைச் செய்தது; சிங்கள பாசிச ராஜபக்சே கும்பலுடன் சேர்ந்து ஈழத் தமிழின அழிப்புப் போரை நடத்தியபோதும், இந்திய அரசு ஈழ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தொடர்ந்து முயன்று வருவதாக துரோகத்தனமாகப் புளுகியது; இலவசங்களால் தமிழக மக்களை கட்டிப் போட்டுவிட்டு, அந்நிய, உள்நாட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தது — இந்தக் குற்றங்களுக்கெல்லாம் தக்க தண்டனை தரவேண்டும் என்று தமிழக மக்கள் வெறுப்புற்று வெதும்பிக் கிடந்தனர். அந்த நிலையில், இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை (2-ஜி) ஊழல் வெளியானதைப் பயன்படுத்தி உண்மையும் பொய்யும் கலந்து பார்ப்பன ஊடகங்கள் பெருமளவில் நடத்திய அதிரடிப் பிரச்சாரந்தான் கருணாநிதியின் தி.மு.க.வுக்கு எதிராக ஒரு அலையாக உருவாகி, அதுவே ஜெயலலிதாவுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

மேற்கண்ட காரணங்களால் தமிழக மக்களிடையே தமக்கு எதிராக நிலவிய வெறுப்பையும் எதிர்ப்பு அலையையும் உணராத கருணாநிதியின் தி.மு.க.வுக்கு, எதிர்க்கட்சி தகுதியைக் கூட அளிக்க மறுத்து பெரும்பாலான அமைச்சர்களையும் வீழ்த்தி படுதோல்வி அடையச் செய்து விட்டார்கள், தமிழக மக்கள். அதைவிட முக்கியமாக, ''ராகுல் காந்தி தலைமையில் மீண்டும் காங்கிரசு எழுச்சி'' என்ற பார்ப்பன ஊடகங்களின் பொய்ப்பிரச்சாரத்தை நிராகரித்து, ஈழத்தில் இன அழிப்புப் போரை நடத்திய காங்கி



படிப்பகம்

www.padippakam.com

ரசையும் அதற்கு மறைமுகத் துரோகத்தனமாக நின்ற இராமதாசு-திருமாவளவன் கட்சிகளையும் அடியோடு சாய்த்து விட்டார்கள்.

தி.மு.க.- காங்கிரசு கூட்டணியின் மீதான வெறுப்பும், எதிர்ப்பு அலையும் வாய்தா ராணியாகவும் கொடநாட்டு உல்லாசவாசியாகவும் உழைக்காமலேயே சதாகாலமும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஜெயலலிதாவுக்கு லாட்டரியில் விழுந்த கொழுத்த பரிசாக ஆட்சி அதிகாரம் கிடைத்திருக்கிறது. இதற்குத் துணைநின்ற பிழைப்புவாதி விஜயகாந்துக்கு எதிர் கட்சித் தகுதி கிடைத்திருக்கிறது. போலி கம்யூனிஸ்டுகள், சரத்குமார், கிருஷ்ணசாமி போன்ற உதிரிகளுக்கும் ஒரு அடையாளம் கிடைத்திருக்கிறது. ஆனால், இவர்களையெல்லாம் போயஸ் தோட்டத்து பால்கனிப் பாவை விரைவில் எடுத்து விழுங்கி விடுவார் அல்லது எட்டி உதைத்து விடுவார் என்பது வேறு விடயம்.

இவர்கள் அடைந்துள்ள வெற்றி நேர்மறையிலானதோ, இவர்கள் அதற்குத் தகுதியானவர்கள் என்பதாலோ கிடைத்தவை அல்ல. நமது நாட்டின், குறிப்பாக தமிழ்நாட்டின் மக்கள் ஒரு அரசியல் கட்சி அல்லது அணியை நிராகரிப்பதும், அல்லது வேறொரு கட்சியை அல்லது அணியை தெரிந்தெடுத்து ஏற்பதும் எந்த அடிப்படையில் என்பதைப் பார்க்க வேண்டும். தேர்தல்களின்போது தம்மிடம் வாக்குக் கேட்டுவரும் அரசியல் கட்சிகளின் கடந்தகால வரலாறு, அவற்றின் அணிகள் மற்றும் தலைமையின் செயல்பாடுகள், நம்பகத்தன்மை, கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் அவர்கள் காட்டும் ஜனநாயக, சமூக கண்ணோட்டம், அக்கறை, அவற்றின் கொள்கைகள், திட்டங்கள், வாக்குறுதிகள், —இவை போன்றவை மீதான மதிப்பீடுகள் அடிப்படையில் மக்கள் வாக்களிப்பதில்லை. தேர்தலுக்குச் சில காலம் முன்பு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், பரபரப்பாகப் பேசப்படும் செய்திகள், தம்மை நேரடியாகவும் உடனடியாகவும் பாதிக்கும் பிரச்சினைகள் -ஆகியவற்றுக்கு அப்பால் அரசியல் கட்சிகள் அல்லது அணிகள் பற்றிய தொகுப்பான முழுமையான மதிப்பீடுகள் அடிப்படையில் வாக்களிப்பதில்லை.

மறுகாலனியாக்கத்தால் சூறையாடப்படும் உழைக்கும் மக்களின் வாழ்க்கை, விவசாயத்தின் அழிவு, நகரமயமாக்கம், தொழிலாளர்கள் கொத்தடிமைகளைப் போல 12 மணி நேரம் வேலை வாங்கப்படுவது, தண்ணீர், கல்வி, மருத்துவம் அனைத்தும் வணிகமயமாக்கப்படுவது - எனத் தமிழக மக்களுக்கு ஓராயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், எவ்வித விழிப்புணர்வும் இல்லாமல், காற்றில் சிக்கிய சருகு போல உள்ள அவர்களின் வாழ்க்கையில் ஓட்டுக் கட்சிகளின் ஊழலும் கொள்ளையும், அக்கட்சிகளால் அறிவிக்கப்படும் இலவசங்களும்தான் உடனடியாகத் தெரிகின்றன. தற்போதைய, முந்தைய ஆட்சிகளில் என்ன நடந்தது என்று மக்களால் தொகுத்துப் பார்க்கத் தெரியாமல், 2ஜி அலைக்கற்றை ஊழல், குடும்ப ஆட்சி, மின்வெட்டு, விலையேற்றம் - என உடனடி நிகழ்வுகளை வைத்து மதிப்பிட்டு முடிவு செய்கின்றனர். ஓட்டுக்கட்சிகள் அனைவரும் அயோக்கியர்கள் என்ற பொதுவானதொரு கருத்து மக்களிடம் நிலவிய போதிலும், தற்போதைய, முந்தைய ஆட்சிகள், ஓட்டுக்கட்சிகளுடைய அயோக்கியத்தனங்களையும் தன்மைகளையும் ஒப்பிட்டு இனம் காண்பதற்கான அரசியல் அறிவை மக்கள் பெற்று விடவில்லை.

தற்போதைய ஆட்சி மீது மக்களுக்கு அதிருப்தி நிலவுகிறது என்றால், மாற்றாக வரக்கூடியவர்களின் தகுதி என்ன, பின்னணி என்ன, வரலாறு என்ன என்பது பற்றி ஊடகங்களும் பேசுவதில்லை; ஆளும் கட்சிகளின் குறைகளை அம்பலப்படுத்தும் ஊடகங்கள், எதிர்க்கட்சிகள் எல்லாம் புதிதாக வந்தவைபோலவும் அவர்களுக்கென்று முந்தைய வரலாறு, செயல்பாடு எதுவும் இல்லை என்பது போலவும் எழுதுகின்றன.

ஆவணக் காப்பகம் போன்ற தகவல் தொகுப்பும் வசதி வாய்ப்புகள் இருந்தும் ஊடகங்கள் தி.மு.க. ஆட்சியையும், முந்தைய ஜெயா ஆட்சியையும் ஒப்பிட்டுக் காட்டி, அதிலிருந்து உண்மையைக் கூறி மாற்று அரசியல் சக்தியை முன்னிறுத்தவில்லை. அதற்கு பதிலாக அவை பரபரப்புத் தகவல்களை வெளியிடுவதில்தான் குறியாக உள்ளன.

கடந்தகால ஜெயா ஆட்சியின் ஊழல், அதிகாரமுறைகேடுகள், பார்ப்பன பாசிச ஆட்சியின் அட்டூழியங்கள் முதலான அனைத்தையும் அறிந்திருந்தும் ஊடகங்கள் அவற்றைத் தொகுத்துச் சொல்லாது மூடிமறைக்கின்றன. மாறாக, ஜெயலலிதா மாறிவிட்டார் என்று கூறி ஆதரிக்கின்றன; தெரிந்தே மோசடி செய்கின்றன. மக்கள் இரு தரப்பையும் நிராகரித்து விட்டால், இன்றைய அரசியலமைப்பு முறையையே நிராக

பிழைப்புவாதத்தின் புதிய பரிமாணம்: ஜெயாவின் பதவியேற்பு விழாவில் இந்து மதவெறி கொலைகாரன் மோடியின் அருகே அமர்ந்து சிரித்துப் பேசி மகிழும் வலது கம்யூ. கட்சியின் தேசியச் செயலர் ராஜா (இடமிருந்து இரண்டாவது), அக்கட்சியின் பொதுச்செயலர் ஏ.பி.பரதன்.





படிப்பகம்

www.padippakam.com


அ.தி.மு.க.வைத் தனது குடும்பத்தின் பிடிக்குள் வைத்திருக்கும் சசிகலா-வுடன் சதியாலோசனை நடத்தும் துக்ளக் ஆசிரியர் ''சோ'' ராமஸ்வாமி.

ரித்து விடுவார்கள் என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

தி.மு.க.வையும் கருணாநிதியையும் சாடி, எதிர்தரப்புக்கு வாக்களிக்கும்படி நேரடியாகவும் மறைமுகமாவும் பிரச்சாரம் செய்த ஊடகங்கள், நேர்மறையில் ஜெயலலிதா ஆட்சிக்கு வரத் தகுதியானவர்தானா என்று சொல்லவில்லை.

ஜெயலலிதா மீண்டும் முதல்வரானதும், அவரை ஆதரிக்கும் ஊடகங்களும் பிழைப்பு வாதிகளும் முதலாளிகளும் வழக்கம்போலத் துதிபாடக் கிளம்பிவிட்டார்கள். ஆட்சி மாறும் போது இப்படியெல்லாம் நடப்பது வாடிக்கை யானதுதான் என்றாலும், இப்போது பழைய பிசாசை புதிய அம்மனாகச் சித்தரிக்கும் கோய பல்சு வேலையை அவர்கள் திட்டமிட்டுச் செய்து வருகிறார்கள். ''ஜெயலலிதா இப்போது மாறிவிட்டார், அவரது ஆட்சி வித்தியாசமான ஆட்சியாக இருக்கும்'' என்ற பிரமை தேர் தலுக்கு முன்பே ஊடகங்களால் திட்டமிட்டு ஊட்டப்பட்டன. தமிழக மக்கள் எதிர்கொண் டுள்ள பிரச்சினைகளுக்குப் போராட்டமோ, மாற்றுத் திட்டமோ முன்வைக்காத போதிலும், ஜெயாவைத் துதிபாடி மக்களின் கவனத்தை அதை நோக்கிக் குவிப்பது என்று பார்ப்பன ஊடகங்கள் செயல்பட்டன.

''தமிழக மக்கள் இலவசங்களுக்கு மயங்கி ஓட்டுப் போட மாட்டார்கள், பணத்துக்கு ஓட்டுப் போடமாட் டார்கள், எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது என்று நிரூபித்துவிட்டார்கள்'' என்று இந்த ஊடகங்கள் மக்களைப் போற்றுவதாகக் காட்டிக் கொண்டு அ.தி.மு.க.வுக்குச் சாமரம் வீசுகின்றன. பணபலமிக்க ஆளும் கட்சியான தி.மு.க.தான் பணப்பட்டுவாடா செய்தது, மற்ற கட்சிகள் அப்படிச் செய்யவில்லை என் பதைப் போல எழுதுகின்றன. அதற்காகத் தேர்தல் ஆணையத்தைப் மிகவும் பாராட்டின. முன்பு ஜெயா ஆட்சியிலிருந்தபோது வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்ததும், லட்டுக்குள் மூக்குத்தி, கம்மல்களை வைத்து விநியோகித்ததும், இடைத்தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் போட்டியிட முடியாதபடி அராஜகமும் நடந்தது. இப்போதும் தேர்தல் அறிவிப்புக்கு முன்பே பணப் பட்டுவாடாவை ஜெயா ஆரம்பித்து நடத்தி யதும், பொருட்களுக்கு 'டோக்கன்கள்' கொடுக்கப்பட் டதும் இப்போது அம்பலத்துக்கு வருகின்றன.

தி.மு.க.வின் இஞ்ச-ஊழலை அம்பலப்படுத்து வதில் மட்டும் அக்கறை காட்டும் ஊடகங்கள், ஜெயா ஆட்சியில் நடந்த இலஞ்ச-ஊழல், கொள்ளைகளைப் பற்றி வாய்திறப்பதில்லை. ஜெயா மீது சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் சொத்து சேர்த்த வழக்குகளும் உள்ளன. இந்த வழக்குகள் பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கின்றன. ராசாவும் கலா நிதியும் சி.பி.ஐ. விசாரணை, வழக்கு காரணமாக பதவி யில் இருக்கக்கூடாது என்கிற போது, ஜெயலலி தாவுக்கு மட்டும் அது பொருந்தாதா? இருப்பினும், ஜெயலலிதா கும்பலின் முந்தைய மகாத்மியங்கள் அனைத்தும் ஊடகங்களால் மூடிமறைக்கப்படு கின்றன.

''இந்தத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிரான அலையால் நான் வெற்றி பெறவில்லை. 2001 முதல் 2006 வரையிலான எனது பொற்கால ஆட்சியை மக்கள் நினைவு கூர்ந்து அந்த ஆட்சி வேண்டுமென்றுதான் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள்'' என்கிறார், ஜெய லலிதா. அவர் தனது முந்தைய ஆட்சியைப் பொற்கால ஆட்சியாகச் சித்தரிக்கும் போது, அதன் யோக்கி யதையைச் சொல்ல வேண்டியது ஊடகங்களின் கடமையல்லவா? ஆனால், அவர் மாறிவிட்டார் என்று வானளவுக்குத் தூக்கிக் காட்டுவதோடு, தங்களது பல் வேறு விருப்பங்களையும் நோக்கங்களையும் அதில் ஏற்றிக் கூசாமல் புளுகவும் கிளம்பியிருக்கிறார்கள். ''இவர் முந்தைய ஜெயலலிதா இல்லை, என்னே வொரு நிர்வாகத் திறமை, தலைக்கு மேலே ஒளிவட் டம் பாருங்கள்'' என்று இந்தக் கோயபல்சுகள் இந்தக் கதாபாத்திரத்தை விளக்கி விளக்கி வியாபாரம் செய்யக் கிளம்பியுள்ளார்கள்.

''தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா என்கிற நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் வரிகளுக்கு உயிர் கொடுத்திருக்கும் தமிழக வாக்காளப் பெருமக்களை 'தினமணி' பெருமி தத்துடன் தலைவணங்கிப் பாராட்டுகிறது'' என்று மெய்சிலிர்த்து தலையங்கம் எழுதுகிறது தினமணி. தமிழக மக்கள் பயங்கரமாக ஆர்த்தெழுந்து, தி.மு.க.வின் ஊழல், குடும்ப ஆட்சிக்கு எதிராக ஒரு மாபெரும் புரட்சியைச் சாதித்துவிட்டதாக உச்சி



படிப்பகம்

www.padippakam.com



ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியின் வாக்கு எண்ணிக்கை நடந்த சென்னை-லயோலா கல்லூரியில், அ.தி.மு.க. கும்பல் நடத்திய வன்முறை வெறியாட்டத்தில் அடித்து நொறுக்கப்பட்டுக் கிடக்கம் தளவாடங்கள்.

முகர்ந்து கொண்டாடுகிறது, தினமணி. அதிலும் பணம் கொடுத்து வாக்களிப்பவர்கள் என்ற அவப்பெயரை துடைத்தெறிந்து இந்தியாவுக்கே முன்னுதாரணமாக மாறி நாட்டையே காப்பாற்றிவிட்டார்களாம், தமிழக மக்கள். சசிகலாவின் குடும்ப ஆதிக்கம் இருக்கும் என்று தெரிந்த போதிலும், இருந்தாலும் பரவாயில்லை என்று தன்மானமிக்க தமிழக மக்கள் தி.மு.க.வின் குடும்ப ஆட்சிக்கு எதிராகக் குமுறி ஜெயா கும்பலை வெற்றி பெற வைத்து விட்டார்களாம். தி.மு.க.வின் குற்றங்களைப் பட்டியலிடும் தினமணி, இந்த வெற்றிக்கு அருகதையானவர்தானா என்று ஜெயலலிதாவைப் பற்றி மறந்தும் எழுதுவதில்லை.

''ஜெயலலிதா முதல்வராகப் பதவி ஏற்றார் என்ற உடனேயே, போலீசுத் துறை தானாகவே மும்முரத்துடன் செயல்படத் தொடங்கி விட்டது. இனி தங்களுடைய அட்டகாசங்கள் அடக்கப்படும் என்பதை ரவுடிகள் உணர்ந்துவிட்டது போல நகர்ப்புறங்களில் ஒரு புதிய அமைதி காணப்படுகிறது. சட்டம்-ஒழுங்கை நிர்வகிப்பதில் முதல்வர் ஜெயலலிதா கண்டிப்பைக் காட்டுவார் என்ற மக்களின் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. ஜெயலலிதாவின் ஆட்சி முதல் தினத்திலிருந்தே முறையான திசையில் செல்லத் தொடங்கி இருக்கிறது'' என்று கோயபல்சை விஞ்சு மளவுக்குக் கூசாமல் புளுகுகிறார், பார்ப்பன துக்ளக் சோ. சென்னை நகரில் கொட்டமடித்து வந்த சங்கிலிப் பறிப்பு ரவுடிகள், உயிருக்கு அஞ்சி ஆந்திரா பக்கம் ஓடி ஒளிந்து விட்டனர் என்று ஒரு கட்டுக்கதையை ஜெயாவே பரப்புகிறார். ஆனால்,சென்னை உட்பட தமிழகமெங்கும் சங்கிலிப் பறிப்புகளும் கொலை, கொள்ளைகளும் அடுத்தடுத்து இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

''அவரது முகத்தில் எப்போதுமில்லாத புன்னகை - மென்மையான தாய்மையுணர்வுமிக்க தோற்றத்தைக் கொடுக்கிறது. கருணைமிக்க அம்மாவாகக் காட்சியளிக்கிறார். மக்கள் அளித்துள்ள தீர்ப்பு அர்த்தமுள்ளது என்பதை முதல்நாள் தொட்டே நிரூபிக்கத் தொடங்கியிருக்கிறார். அவரின் முந்தைய ஆட்சிக் காலங்களில் ஆதிக்கம் செலுத்திய சர்வாதிகாரத் திற்குப் பதில், வெளிப்படைத்தன்மையும் பதில் கூறும் பொறுப்புணர்வும் இந்த முறை பிரதிபலிக்கிறது'' என்று ஜால்ரா போடுகிறது, இந்தியா டுடே. ''இது மக்கள் புரட்சி. மக்கள் ஒரு மவுனப் புரட்சியை நடத்தியிருக்கிறார்கள்'' என்று ஜெயா துதி பாடுகிறது, குமுதம் ரிப்போர்ட்டர். சசிகலா கும்பலை மடியில் கட்டிக் கொண்டுள்ள ஜெயலலிதாவின் வெற்றியை, குடும்ப ஆட்சிக்குத் தமிழக மக்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் என்று வெட்கமின்றித் துதிபாடுகின்றனர் போலி கம்யூனிஸ்டுகளான தா.பா.வும் ஜி.ராமகிருஷ்ணனும்.

ஆட்சிக்கு வந்தவுடனேயே, சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதுதான் முதற் பணி என்றார், ஜெயலலிதா. அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற லயோலா கல்லூரியில் மு.க.ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதி வாக்கு எண்ணிக்கையில் இரு தரப்புக்கும் இழுபறி நீடித்தபோது, அ.தி.மு.க. குண்டர்கள் அராஜகம் செய்து கொண்டிருந்தனர்.

ஜெயலலிதாவின் ஆட்சியில் போலீசுத் துறையில் தலையீடு இருக்காது, அத்துறையானது சுதந்திரமாகச் செயல்படும் என்று பிரமையூட்டும் கோயபல்சுகளின் பிரச்சாரம் எவ்வளவு பெரிய பொய் என்பதை, ஜெயா ஆட்சியில் அமைச்சராகப் பதவியேற்கவிருந்த மரியம் பிச்சையின் சாவையொட்டி திருச்சியில் நடந்துள்ள அ.தி.மு.க. குண்டர்களின் ரவுடித்தனம் நிரூபித்துக் காட்டுகிறது.

ஜெயலலிதாவின் ஆட்சி எப்படிப்பட்டதாக இருக்கும் என்று முடிவு செய்வதற்கு ஊகமோ, காத்திருப்போ அவசியமில்லை. தி.மு.க. வின் ஊழலால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடு குறித்துப் பெருங் கூச்சல் போட்டே ஆட்சியைப் பிடித்து விட்ட ஜெயா செய்த முதற் காரியம், 1200 கோடி ரூபாய் விரயமாக்கும் வகையில் புதிய தலைமைச் செயலகத்தை இழுத்து மூடிவிட்டு, தானே தகுதியற்றதென்று நிராகரித்து, புதிய தலைமைச் செயலகத்தைக் கட்டுவதற்கு பழமை வாய்ந்த கல்லூரியை இடிக்க எத்தணித்துவிட்டு, எதிர்ப்பு கிளம்பியதும் வேறொரு இடத்தில் பூமி பூசையும் போட்ட ஜெயா, இப்போது ஜார்ஜ் கோட்டைக்குள் புகுந்துவிட்டார். ஏற்கெனவே அச்சிடப்பட்ட 200 கோடி ரூபாய் பாடப் புத்தகங்களை வீணாக்கி, மேலும் 100 கோடி செலவில் பழைய பாடப் புத்தகங்களை அச்சிட்டு 'சமச்சீர் கல்வி'யை ஒழிக்கும் நோக்கில் உத்தரவு போட்டுள்ளார். இவற்றையெல்லாம் தனது கோயபல்சு பாணியில் நியாயப்படுத்த வாதம் புரிகிறார். இவையெல்லாம் பார்ப்பன-பாசிச ஜெயா மாறிவிட்டதையா காட்டுகின்றன?

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்! கார்ப்பரேட் கொள்ளையர்களைத் தண்டிப்போம்!!

## – நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளின் மே தின அறைகூவல்.

அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்தையும் மறுகாலனியாக்கத்தையும் முறியடிக்கவும், அரசு சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடிக்க வழிவகுக்கும் தனியார்மயம்- தாராளமயம்- உலகமயத்தை வீழ்த்தவும், கார்ப்பரேட் கொள்ளையர்களையும் ஊழல் அரசியல்வாதிகள்-அதிகாரிகளைத் தண்டித்து அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், நக்சல்பாரி புரட்சியாளர்கள் தலைமையில் புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் அணிதிரள அறைகூவி ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக மே நாளைக் கடைபிடித்தன.


திருச்சியில்...

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த இப்புரட்சிகர அமைப்புகள் இணைந்து, சென்னை-பூந்தமல்லியில் மே நாள் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. காலை 10 மணியளவில் பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் தொடங்கிய பேரணி, உழைக்கும் மக்களின் குடியிருப்புப் பகுதிகள் வழியே சென்று பேருந்து நிலையம் அருகே முடிவடைந்தது. அங்கு நடைபெற்ற எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்துக்குப் பின் முன்னணியாளர்கள் உரையாற்றினர்.


சென்னையில்..


உசிலம்பட்டியில்

கோவை, ஈரோடு, நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து மே நாளன்று மாலை 4 மணியளவில் கோவை - சிவானந்தா காலனியிலிருந்து சித்தாபுத்தூர் வரை செங்கொடிகள் விண்ணில் அசைந்தாட எழுச்சிமிகு பேரணியையும், அங்கு மேனன் தெருவில் பொதுக்கூட்டத்தையும் நடத்தின. திடீரென பெருங்காற்றுடன் மழை பெய்த போதிலும், இடர்ப்பாட்டைப் பொருட்படுத்தாமல் வர்க்க உணர்வோடு குடும்பம் குடும்பமாகத் தொழிலாளர்கள் செஞ்சட்டையணிந்து பங்கேற்ற இப்பேரணியும் பொதுக்கூட்டமும், துவண்டு கிடந்த தொழிலாளி வர்க்கத்துக்குப் புதிய நம்பிக்கையையும் பேருற்சாகத்தையும் ஊட்டுவதாக அமைந்தது.

திருச்சி, தஞ்சை, கரூர், திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து திருச்சி - உறையூர் ஜெயந்தி பேருந்து நிறுத்தம் அருகிலிருந்து புத்தூர் நாலுரோடு வரை பறையொலியும் முழக்கங்களும் எங்கும் எதிரொலித்த பேரணியை நடத்தின. பேரணியின் முகப்பில் பறைமுழக்கமும் சிறுவர்களின் தப்பாட்டமும், கார்ப்பரேட் முதலாளிகளின் காலடியில் எலும்புத் துண்டுக்கு அடித்துக் கொள்ளும் நாய்களாக ஓட்டுப் பொறுக்கிகளைச் சித்



படிப்பகம்

www.padippakam.com

தரித்துக் காட்டிய காட்சியும், மறுகாலனியாக்கத்துக்கு எதிரான அரசியலை மக்களிடம் பிரச்சாரப்படுத்தின. பேரணியின் முடிவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னணியாளர்களும் இணைப்புச் சங்கத்தின் தலைவர்களும் உரையாற்றினர்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து ஒசூரில் பிரம்மாண்டமான மே நாள் பேரணி ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஒசூர் எம்.ஜி.ஆர். சிலை அருகிலிருந்து ராம்நகர் வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் செஞ்சட்டையுடன் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் நடத்திய இப்பேரணியின் இறுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், முன்னணியாளர்கள் உரையாற்றினர்.

கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து கடலூரில் மே நாள் பேரணி ஆர்ப்பாட்டத்தை நடத்தின. கடலூரில் பெரியார் சிலை அருகிலிருந்து மஞ்சக்குப்பம் மணிக்கூண்டு வரை நடைபெற்ற பேரணியில் இறுதியில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை, தேனி, சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து உசிலம்பட்டியில் மே நாள் பேரணி -ஆர்ப்பாட்டத்தை நடத்தின. தேர்தல் ஆணையத்தின் விதிகளைக் காட்டி அனுமதி மறுத்து, போலீசு தனது வாகனத்தை சாலையின் குறுக்கே நிறுத்தி தடுத்த போதிலும், தடையை மீறி ஆவேசத்துடன் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் பேருந்து நிலையம் வரை தோழர்கள் உணர்வோடு பேரணியை நடத்தினர். அங்கு செங்கொடியேற்றி ஆர்ப்பாட்டத்தை நடத்தி முன்னணியாளர்கள் உரையாற்றியபோது, தோழர்களை மறித்து கைது செய்த போலீசு, பின்னர் மாலையில் அனைவரையும் விடுவித்தது.

● பு.ஜ.செய்தியாளர்கள்.

# கொலை வாளினை எடு! கொடியோர் செயல் அறு!!

**தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுக்கவும், இலவசக் கல்வி உரிமையைப் பெறவும் ஆர்த்தெழுந்து போராடுவோம்!**

தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்துள்ள மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC), மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்துடன் இணைந்து கடந்த 24.5.2011 அன்று விருத்தாசலத்தில் ‘‘இலவசக் கல்வி உரிமை மாநாடு’’ நடத்தியது.

‘‘தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையைப் போராடி நிறுத்துவோம்! அனைவருக்கும் இலவசக் கல்வியை நிலைநாட்டுவோம்!’’ என்ற மைய முழக்கத்துடன், மாணவர்களும் பெற்றோரும் கல்வியாளர்களும் பங்கேற்ற இம்மாநாட்டில், மூத்த கல்வியாளரும் சமச்சீர் கல்விக் கமிட்டி உறுப்பினருமான தோழர் ச.சீ. இராசகோபாலன், ‘‘இலவச லேப்டாப் வழங்கும் அரசுக்கு இலவசக் கல்வி தர இயலாதா?’’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். ‘‘தனியார்மயக் கொள்கைதான் அரசின் கொள்கை’’ என்ற தலைப்பில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் ராஜு, ‘‘கட்டணக் கொள்ளையைப் போராடி நிறுத்துவோம்!’’ என்ற தலைப்பில் பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் கணேசன், ‘‘அனைவருக்கும் இலவசக் கல்வியை நிலைநாட்டுவோம்!’’ என்ற தலைப்பில் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் மீனாட்சி ஆகியோர் உரையாற்றினர்.

இம்மாநாட்டில் , ‘‘நீதிபதி கோவிந்தராசன் கமிட்டி நிர்ணயித்த கட்டணத்துக்கும் கூடுதலாக வசூலித்த கட்டணத்தை இவ்

தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக நடந்த இலவசக் கல்வி உரிமை மாநாட்டில் உரையாற்றும் பிரபல கல்வியாளர் எஸ்.எஸ். ராஜகோபாலன்.






படிப்பகம்

www.padippakam.com

வாண்டு கல்விக் கட்டணத்தில் கழித்துக் கொள்ளவும், கூடுதல் கட்டணம் கேட்டு துன்புறுத்தும் பள்ளிகள் மீது உடனே நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். கட்டாய இலவசக் கல்வி உரிமைச் சட்டம் 2009-இன்படி, அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் ஏழை மாணவர்களுக்கு எல்.கே.ஜி., யு.கே.ஜி.மற்றும் முதல் வகுப்பில் இலவச 25 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தாத தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமையான சரத்து 21-எ இன்படி 6 முதல் 14 வயது வரை அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி என்பதை நடைமுறைப்படுத்த இந்த ஆண்டே சட்டம் இயற்ற வேண்டும். தனியார் பள்ளி முதலாளிகளுக்கு கொள்ளை இலாபத்தை உத்திரவாதம் செய்வதற்காகவே நியமிக்கப்பட்ட நீதிபதி ரவிராஜ் பாண்டியன் கமிட்டியைக் கலைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். தமிழக அரசு இவ்வாண்டு கல்விக் கட்டணம் அறிவிக்காத நிலையில், கோவை பெர்க்ஸ் பள்ளி நிர்வாகம் கூடுதல் கட்டணம் கேட்டு துன்புறுத்தியதால், தீக்குளித்து உயிரிழந்த சங்கீதா மரணத்துக்குக் காரணமான பள்ளி முதலாளியைக் கைது செய்து, அப்பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும். சங்கீதா குடும்பத்துக்கு உரிய இழப்பீடும் யுகேஜி படிக்கும் அவரது மகனது கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்க வேண்டும். தமிழக அரசின் சமச்சீர் கல்விச் சட்டத்தை உச்ச நீதிமன்றம் சரியானது என்று தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், கொள்ளை இலாப தனியார் மெட்ரிக் பள்ளி முதலாளிகளுக்கு ஆதரவாக சமச்சீர் பாடத் திட்டத்தை நிறுத்தி வைத்து பழைய பாடத்திட்டமே செல்லும் என்ற தமிழக அமைச்சரவையின் முடிவை ரத்து செய்து இவ்வாண்டே சமச்சீர் கல்வியை அமுல்படுத்திட வேண்டும். தாய்மொழிக் கல்வியையும் அரசுப் பள்ளிகளையும் ஆதரித்து, கல்வி வியாபாரிகளின் தனியார் பள்ளிகளையும் ஆங்கிலவழிக் கல்வியையும் பெற்றோர்கள் புறக்கணிக்க வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் ஒரே தரமான கல்வியை அரசு பொறுப்பில் இலவசமாக வழங்குவதற்குத் தடையாக உள்ள தனியார்மயக் கொள்கையை எதிர்த்துப் போராட பெற்றோர்களும் மாணவர்களும் முன்வரவேண்டும்'' - என பலத்த கரவொலிக்கிடையே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பிரச்சாரம் செய்துவரும் மனித உரிமை பாதுகாப்பு மையம், கட்டாய இலவசக் கல்வி உரிமைச் சட்டம் 2009-இன்படி, இவ்வட்டாரத்திலுள்ள அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச 25 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரி மனு கொடுத்து வலியுறுத்தியது. தனியார் கல்வி வியாபாரிகளின் கட்டணக் கொள்ளைக்காக ரத்து செய்யப்பட்டுள்ள சமச்சீர் கல்வியை மீண்டும் நடைமுறைப்படுத்தக் கோரி கடந்த 31.5.2011 அன்று மாவட்டக் கல்வி அலுவலகம் அருகே முற்றுகைப் போராட்டத்தையும் நடத்தியது. தனியார் பள்ளி முதலாளிகளின் பகற்கொள்ளையால் பதறிப் போய் நிற்கும் சாமானிய மக்களிடம், இம்மாநாடும் போராட்டமும் புதிய நம்பிக்கையை விதைத்து, தனியார்மயக் கொள்ளைக்கு எதிராகப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

**தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம், கடலூர்.**




# தற்கொலையல்ல... கொலை!

## – சங்கீதாவின் மரணத்துக்கு நீதி கேட்டு நடந்த ஆர்ப்பாட்டம்.

**கோ**வை மசக்காளிபாளையத்தைச் சேர்ந்த பட்டதாரியான சங்கீதா, பெர்க்ஸ் மேல்நிலைப் பள்ளியில் யு.கே.ஜி. படிக்கும் தனது மகனுக்கு ரூ.12,000 கட்டணம் செலுத்த வழியில்லாமல் விரக்தியடைந்து, தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீயிட்டு மாண்டு போயுள்ள கொடூரச் சம்பவம் தமிழகத்தையே உலுக்கியுள்ளது. இப்பள்ளிக்கு நீதிபதி கோவிந்தராசன் கமிட்டி நிர்ணயித்த கட்டணம் ரூ. 3558 தான். ஆனால், பெர்க்ஸ் பள்ளி நிர்வாகம், இக்கமிட்டி நிர்ணயித்த தொகையை விட 3 மடங்கு அதிகமான தொகையைக் கேட்டு பெற்றோரிடம் அடாவடி செய்துள்ளது. சங்கீதாவின் மரணத்துக்குக் காரணமான, இச்சட்டவிரோதக் கொள்ளையர்கள் மீது வழக்கோ, விசாரணையோ நடத்தப்படவில்லை. கூடுதல் கட்டணம் வசூலித்த அட்டூழியத்துக்காக இப்பள்ளி மீது நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்திய அரசியல் சட்டத்தின்படி, கல்வி பெறும் அடிப்படை உரிமை இன்றைய தனியார்மயச் சூழலில் தொடர்ந்து பறிக்கப்பட்டு வருவதற்கு இரத்த சாட்சியம்தான், சங்கீதாவின் மரணம்!

சங்கீதாவைத் தற்கொலைக்குத் தூண்டிய பெர்க்ஸ் பள்ளி முதலாளியைக் கைது செய்து, அப்பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்து அரசுப் பள்ளியாக்கக் கோரியும், தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகவும் கோவை முழுவதும் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம், அதன் தொடர்ச்சியாக 20.5.2011 அன்று கோவை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பல்வேறு ஜனநாயக இயக்கத்தினரும், தோழமை அமைப்பினரும் உழைக்கும் மக்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக மக்களை விழிப்புறச் செய்து, போராட அறைகூவுவதாக அமைந்தது.

தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம், கோவை



படிப்பகம்

www.padippakam.com

## சமச்சீர் கல்வி ரத்து:

# சமூக அநீதி!

**ஜெயா, தனியார் பள்ளிக் கொள்ளையர்களின் கைக்கூலிதான் என்பது நிரூபணமாகிவிட்டது.**

**ச**மச்சீர் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைத்ததன் மூலம், பெயரளவிலான சீர்திருத்த நடவடிக்கைகளுக் கும்கூட எதிரான கடைந்தெடுத்த பார்ப்பன-பாசிஸ்டு என்பதைப் பதவியேற்றவுடனேயே நிரூபித்துக் காட்டி விட்டார், ஜெயலலிதா.

சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தும் முகமாக, கடந்த கல்வியாண்டில் முதல் மற்றும் ஆறாம் வகுப்பு களுக்குப் பொதுப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது; இந்தக் கல்வியாண்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கில், அதற்கான பாடத்திட்டமும் தயா ரிக்கப்பட்டு, பாட நூல்களும் அச்சாகி விநியோகிக்கத் தயாராக உள்ள நிலையில், புதிதாகப் பதவியேற்ற அ.தி.மு.க. அரசு, சமச்சீர் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைப்பதாகவும், இந்தக் கல்வியாண்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்புகளுக்கு பழைய பாடத்திட்டங்களே பின்பற்றப்படும் என்றும் அறிவித்துள்ளது.

200 கோடி ரூபாய் செலவில் ஏற்கெனவே அச்சாகி யுள்ள பொதுப் பாடத்திட்டத்திற்கான பாடநூல்களைக் குப்பையைப் போல ஒதுக்கிவிட்ட அ.தி.முக. அரசு, பழைய பாடத்திட்டத்தின்படி இனிதான் பாடநூல் களை அச்சிடப் போகிறது. இதற்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என மதிப்பிடப்பட் டுள்ளது. ஜெயா, அதிரடியாகச் சமச்சீர் கல்வித் திட் டத்தை நிறுத்திவிட்டதால், ஒருபுறம் 200 கோடி ரூபாய்க்கும் மேலான மக்களின் வரிப்பணம் பாழாகி விட்டது. இன்னொருபுறமோ, பள்ளி தொடங்கும் பொழுதே மாணவர்கள் பாடநூல்கள் கிடைக்காமல் திண்டாடப் போகிறார்கள். எப்பேர்பட்ட நிர்வாகத் திறன்!

சமச்சீர் கல்வித் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருப் பதைத் தனியார் பள்ளிக் கொள்ளையர்கள் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்கிறார்கள். ''சமச்சீர் கல்வி என்ற சொற்றொடரைக் கேட்டவுடன், தமிழகம் கல்வி யில் இருண்டுவிடுமோ என்ற அச்சம் எங்களை வாட் டிய வேளையில், வாராது வந்த மாமணிபோல் இறை வனால் அனுப்பப்பட்ட விடிவெள்ளி தாங்களே!'' என அக்கும்பல் ஜெயாவைப் பாராட்டி விளம்பரங்களை வெளியிட்டிருக்கிறது.

''பல்வேறு பாடத் திட்ட முறைகளிலிருந்து சிறந்த பாடத் திட்டத்தைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதே பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் விருப்பமாக உள்ளது. இந்நிலையில் ஒரு மாணவன் குறிப்பிட்ட ஒரு பாடத் திட்ட முறை யில்தான் படிக்க வேண்டும் என்பதை அரசால் கட்டா யப்படுத்த முடியாது. இப்போதைய சமச்சீர் கல்வி முறை, கல்வியின் தரத்தை உயர்த்தாது என்பதால் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும்'' எனத் தனியார் பள்ளி முதலாளிகள் சமச்சீர் கல்விக்கு எதிராக வைத்து வரும் வாதங்களையே அரசின் நிலைப்பாடாக உயர் நீதிமன்றத்தில் தலைமை வழக் குரைஞர் அறிவித்திருக்கிறார்.

தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் பள்ளிக்கல்வியில், அரசு பாடத் திட்டம், மெட்ரிக் பாடத்திட்டம், ஓரி யண்டல் பாடத்திட்டம், ஆங்கிலோ-இந்தியன் பாடத்திட்டம் — என நான்கு வகையான பாடத்திட்டங்கள் நடை முறையில் இருந்து வருகின்றன. இவ் வேறுபட்ட பாடத்திட்டங்கள் மாணவர் கள் மத்தியில் ஏற்றத்தாழ்வை உருவாக்கி வருவதால், ஒரே சீரான பாடத்திட் டத்தை அமல்படுத்த வேண்டும் என சமூக அக்கறை கொண்ட கல்வியாளர் கள் நீண்ட காலமாகக் கோரிவந்ததைத் தான், நாட்டின் ஆகப்பெரும்பான்மை

சமச்சீர் கல்வியை மீண்டும் நடைமுறைப்படுத்தக் கோரி, விருத்தாசலம் நகரில் மாவட்டக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

மாநிலங்களில் இருந்துவருவதைப் போன்ற பொதுப் பாடத்திட்ட முறையைத்தான் கடந்த தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்த முன்வந்தது.

2006-இல் தி.மு.க. அரசு பதவியேற்றவுடன், ''சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவரலாமா, வேண்டாமா?'' என்பது குறித்து ஆராய பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முத்துக்குமரன் தலைமையில், கல்வியாளர்கள் எஸ்.எஸ். ராஜகோபாலன், ஜார்ஜ் ஆகியோரையும் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. இக்குழு தமிழகத்தில் நடைமுறையில் இருந்துவரும் பல்வேறு பாடத்திட்டங்களையும், கர்நாடகம், குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்துவரும் பாடத்திட்டங்களையும் ஆராய்ந்து, சமச்சீர் கல்விமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக 109 பரிந்துரைகளை அரசிடம் அளித்தது.


காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூரில் கூடுதல் கட்டணம் வசூலித்துவந்த மெட்ரிக் பள்ளியைக் கண்டித்துப் பெற்றோர்கள் நடத்திய முற்றுகைப் போராட்டம். (கோப்புப் படம்)

இப்பரிந்துரைகள் அனைத்தையும் தி.மு.க. அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க, முத்துக்குமரன் அறிக்கையின்படி பொது பாடத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவும் முனையவில்லை. மாறாக, இதனை நடைமுறைப்படுத்துவதை இழுத்தடிக்கும் முகமாக விஜயகுமார் கமிட்டியை அமைத்தது. மேலும், தனது கட்சியையும் கூட்டணி கட்சியான காங்கிரசையும் சேர்ந்த பலரும் மெட்ரிக் பள்ளி முதலாளிகளாக இருந்துவருவதாலும் இப்பொதுப் பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்கூட பல சமரசங்களைச் செய்து கொண்டு, தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில்தான் சமச்சீர் கல்வியின் ஒரு அம்சமான பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்திரவிட்டது, தி.மு.க. அரசு.

முத்துக்குமரன் கமிட்டி அளித்த பரிந்துரையின்படி, தமிழகப் பள்ளிகளில் பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுக் கல்வி வாரியம் அமைக்கப்பட்டது. இதன் கீழ் பொது பாடத்திட்டத்தை உருவாக்குவதற்காக வல்லுநர் குழு, ஆசிரியர் குழு, மறுஆய்வுக் குழு ஆகிய மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்கள் இணைந்து உருவாக்கிய பாடத்திட்டம் கல்வித்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அதன் நிறை, குறை பற்றிக் கருத்துக் கேட்கப்பட்டு, அதன் அடிப்படையில் குறைகள் நீக்கப்பட்டு, புதிய பகுதிகள் இணைக்கப்பட்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டதாகவும், அதனை பொதுக்கல்வி வாரியம் அங்கீகரித்த பிறகே பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டதாகவும் முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசும், இப்பொதுப் பாடத்திட்டத்தை ஆதரிக்கும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மெட்ரிக் பள்ளி முதலாளிகள் இப்பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்தோடு, இச்சமச்சீர் கல்விச் சட்டத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலும், பின்னர் உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்து தோற்றுப் போனார்கள். அவ்விரு நீதிமன்றங்களும் இது மாநில அரசின் உரிமை என்று இச்சட்டத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தன. அப்போதெல்லாம் சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரிக்கவோ, எதிர்க்கவோ செய்யாமல் முடங்கிக் கிடந்தது, ஜெயா கும்பல். இப்பொழுதோ, மெட்ரிக் பள்ளி முதலாளிகளும் அ.தி.மு.க. அரசும் இதனையெல்லாம் மறைத்துவிட்டு, பொதுப் பாடத்திட்டத்தை அவசர கோலத்தில் உருவாக்கி நடைமுறைப்படுத்திவிட்டனர் என்ற பொய்யைத் திரும்ப திரும்பச் சொல்லி, இது தரம் குறைந்த பாடத்திட்டம் என்ற அவதூறைத் திட்டமிட்டு பரப்பி வருகின்றனர்.

இப்பொது பாடத்திட்டத்தில் குறைகள் கண்டறியப்பட்டால், அவற்றை ஒரு சுற்றறிக்கையின் மூலம் நீக்கிவிட்டு, பொதுப் பாடத்திட்டத்தை இந்தக் கல்வியாண்டு முதலே ஒன்று முதல் பத்தாம் வகுப்பு முடிய நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்றுதான் கல்வியாளர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இப்பொதுப் பாடத்திட்டம் தரம் குறைவாக இருப்பதாகக் கூச்சல் போடும் அ.தி.மு.க. கும்பலோ, ''கருணாநிதி இயற்றிய செம்மொழி தமிழ் பற்றிய பாடலும், அவரைப் பற்றிய குறிப்புகளும் இப்பொதுப் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளதை''த் தவிர, வேறெந்த குறைகளையோ, பிழைகளையோ இதுவரை சுட்டிக் காட்டவில்லை.

இப்பொதுப் பாடத்திட்டம் மாணவர்களின் பாடச் சுமையைக் குறைத்திருப்பதைத்தான், தரத்தைக் குறைத்துவிட்டதாக மெட்ரிக் பள்ளி முதலாளிகள் ஒப்பாரி வைக்கிறார்கள். பாடச் சுமையை அதிகரித்தால் தான் தரம் அதிகரிக்கும் என்பது முட்டாள்தனமான, அறிவியலுக்குப் புறம்பான வாதம்.



படிப்பகம்

www.padippakam.com

பொதுப் பாடத்திட்டத்தைத் தரம் குறைவானதெனக் குற்றஞ்சுமத்தும் மெட்ரிக் பள்ளிகள், தங்கள் பள்ளி மாணவர்களுக்கு தமிழ் மொழியைப் பயிற்றுவிக்க அரசு பாடத்திட்டத்தைதான் பின்பற்றுகின்றன. மேலும், மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் +1 மற்றும் +2 வகுப்புகளுக்கும் அரசு பாடத்திட்டத்தைத்தான் பின்பற்றுகிறார்களேயொழிய, 'தரம்' அதிகமுள்ள வேறு பாடத்திட்டங்களுக்கு மாறிச் செல்லவில்லை. +1 மற்றும் +2 அளவில் பொதுப் பாடத்திட்டம் வெகுகாலமாகவே நடைமுறையில் இருக்கும்பொழுது, ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் தரம் குறைந்துபோகும் என்பதற்கு எந்த அடிப்படையும் இருக்க முடியாது.

புதிய தலைமைச் செயலகம், சட்ட மேலவை போல சமச்சீர் கல்வித் திட்டமும் தி.மு.க. அரசால் உருவாக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதால்தான், இத்திட்டத்தை ஜெயா நிறுத்தி வைத்துவிட்டார் என இப்பிரச்சினையைச் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. சனாதன தர்மத்தையும், தனியார்மயம் - தாராளமயத்தையும் தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் பார்ப்பன பாசிஸ்டான ஜெயாவிற்குச் சமத்துவம் என்ற சொல்கூட அறவே பிடிக்காது; அவர் சமச்சீர் கல்வித் திட்டத்தை காலவரையற்று நிறுத்தி வைத்துவிட்டதை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். அவர் பள்ளிக் கல்வி தொடர்பாக விடுத்துள்ள இன்னொரு அறிவிப்பு இதனை உறுதி செய்கிறது.

தனியார் ஆங்கிலப் பள்ளிக் கல்வி முதலாளிகள் அடிக்கும் கட்டணக் கொள்ளை அரசால் கட்டுப்படுத்தப்படுமா எனப் பெற்றோர்கள் எதிர்பார்த்திருக்கும் வேளையில், ''தனியார் பள்ளிக்கூடங்களில் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில் அரசு நேரடியாகச் சம்பந்தப்படவில்லை; கட்டண நிர்ணயக் குழுவுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு, இந்த விஷயத்தில் தலையிட வேண்டும் எனப் பள்ளிகள் விரும்பினால் அரசு தலையிடும்'' என அறிவித்திருக்கிறார், ஜெயா. வாராது வந்த மாமணி என ஜெயாவைத் தனியார் பள்ளி முதலாளிகள் புகழுவதற்கு இதைவிட வேறென்ன காரணம் இருந்துவிட முடியும்?

மைய அரசு கொண்டு வந்துள்ள கல்வி உரிமைக்கான சட்டத்தை, இந்த ஆண்டு முதல் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என தி.மு.க. அரசு தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக உத்தரவிட்டது. இதைக் கேட்டு அதிர்ந்து போன சென்னையைச் சேர்ந்த தனியார் பள்ளியொன்றின் நிர்வாகம், ''இச்சட்டப்படி ஏழை மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டால், பள்ளியின் ஒழுக்கமே கெட்டுவிடும்; எனவே, பெற்றோர்கள் இச்சட்டத்திற்கு எதிராகப் போராட வேண்டும்'' எனக் குறிப்பிட்டு, தமது பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இதனைத் தனிப்பட்ட பள்ளியொன்றின் கருத்தாகப் பார்க்க முடியாது. ஏழைகளின் கல்வியுரிமை குறித்த தனியார் பள்ளி முதலாளிகளின் பொதுக்கருத்து இதுதான். தனியார் ஆங்கிலப் பள்ளி முதலாளிகள் ''தரம், ஒழுக்கம்'' எனக் கூச்சல் போடுவதன் பின்னே, ஏழை மக்களுக்கு எதிரான வெறுப்புதான் மறைந்திருக்கிறது.

''சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள குழு, தனது பரிந்துரைகளை அளிக்க கால நிர்ணயம் ஏதும் வகுக்கப்படவில்லை'' என அறிவித்து, அக்கல்வித் திட்டத்தை நிரந்தரமாக நிறுத்திவிடும் முயற்சியில் ஜெயா இறங்கியிருக்க, சி.பி.எம்., ''சமச்சீர் கல்வித் திட்டம் கைவிடப்பட மாட்டாது எனப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தம்மிடம் உறுதியளித்ததாக'' அறிக்கைவிட்டு, ஜெயாவின் சதித்தனத்தை மூடிமறைத்துவிட முயலுகிறது. ஏழைகளின் கல்வி உரிமைக்காகப் போராடுவதைவிட, ஜெயாவிற்கு விசுவாசமாக இருப்பதில்தான் சி.பி.எம்.-க்கு எவ்வளவு அக்கறை! சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து கருத்தரங்குகளிலும் ஊடகங்களிலும் வலியுறுத்தி வந்த பிரபல கல்வியாளர்களும் ஓய்வு பெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்களும் பேராசிரியர்களும் இப்போது பாசிச ஜெயாவின் அதிரடி நடவடிக்கையைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டதோடு முடங்கிப் போய்விட்டனர். சமச்சீர் கல்வியை வலியுறுத்திய ராமதாசும் போலி கம்யூனிஸ்டுகளும் எவ்விதப் போராட்டமுமின்றி வாய் மூடிக் கிடக்கின்றனர்.

சமச்சீர் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு இப்போது நிறுத்தப்படுவதால், வாதங்களையும் எதிர்வாதங்களையும் மக்கள் புரிந்து கொண்டு போராட கையில் கிடைத்த ஆயுதமாக இக்கல்வித் திட்டம் மாறிவிட்டது. தமிழகமெங்கும் ஆங்காங்கே உழைக்கும் மக்கள் சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும் தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகவும் போராடத் தொடங்கியுள்ளனர். இப்போராட்டத்தை பார்ப்பன-பாசிச ஜெயா கும்பலுக்கும் தனியார்மயம்-தாராளமயத்துக்கும் எதிரான போராட்டமாக முன்னெடுத்துச் செல்வதே புரட்சிகர ஜனநாயக சக்திகளின் உடனடிக் கடமை.

**தனியார் ஆங்கிலப் பள்ளி முதலாளிகள், ''தரம், ஒழுக்கம்'' எனக் கூச்சல் போடுவதன் பின்னே, ஏழைகளுக்கு எதிரான மேட்டுக்குடி கும்பலின் பணத் திமிரும், வெறுப்பும்தான் மறைந்திருக்கிறது.**

● திப்பு



படிப்பகம்

www.padippakam.com

### மே.வங்கத் தேர்தல் முடிவுகள்:

# ‘மார்க்சிஸ்டு’கள் மண்ணைக் கவ்வியது ஏன்?

**சி.பி.எம்., சமூக பாசிசக் கட்சியாகச் சீரழிந்து போனதே, அதன் தோல்விக்கு முதன்மையான காரணம்.**

‘‘மே.வங்கத்தைப் பார்!’’, ‘‘வங்கம் வழிகாட்டுகிறது!’’ என்று 80-களில் சிபிஎம் கட்சியினர் பெருமையுடன் பிரச்சாரம் செய்த முழக்கம், இன்று எதிர்கட்சிகள் சி.பி.எம். கட்சியினரைப் பார்த்து கேலி செய்வதற்கானதாகிவிட்டது. 34 ஆண்டுகாலமாக மே.வங்கத்தில் ஆட்சி செய்த போலி கம்யூனிஸ்டு ‘இடதுசாரி கூட்டணி’ நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத படுதோல்வியடைந்துள்ளதோடு, சி.பி.எம். முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா உள்ளிட்டு அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் இத்தேர்தலில் மண்ணைக் கவ்வியுள்ளனர். மே.வங்கத்தில் 2006-ஆம் ஆண்டில் நடந்த கடந்த சட்டமன்றத் தேர்தலில் 235 இடங்களை வென்ற ‘இடதுசாரி’ கூட்டணி, இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்டது. மொத்தமுள்ள 294 தொகுதிகளில் 226-ஐ திருணாமுல் காங்கிரசு கைப்பற்றி ‘இடதுசாரி’ கூட்டணியை செல்லாக்காசாக்கியுள்ளது. மே.வங்கம் மட்டுமின்றி, கேரளாவிலும் ஆட்சியை இழந்து, மிகச்சிறிய மாநிலமான திரிபுராவில் மட்டுமே சி.பி.எம். கூட்டணி ஆட்சி நீடிக்கிறது.

கேரளத்திலும் திரிபுராவிலும் ‘இடதுசாரி’ கூட்டணி தேர்தல்களில் தோல்வியடைவதும் மீண்டும் ஆட்சிக்கு வருவதும் வாடிக்கையானதுதான். ஆனால், வங்கத்தில் அசைக்க முடியாத கோட்டையாக இருந்த ‘இடதுசாரி’ கூட்டணி இப்போது மணற்கோட்டையாகச் சரிந்துபோகக் காரணங்கள் என்ன என்பதை முதலாளித்துவ ஊடகங்கள் பரபரப்புடன் அலசுகின்றன. முதலாளித்துவப் பத்திரிகைகள் குறிப்பிடுவதுபோல, இந்தத் தோல்வி எதிர்பாராததோ, ஆச்சரியமோ, அதிசயமோ அல்ல. புரட்சி சவடால் அடித்து வந்த சி.பி.எம். கட்சி, தனியார்மய- தாராளமயத்துக்கு ஏற்பத் தன்னை மறுவார்ப்பு செய்து கொண்ட நாளிலிருந்தே அதன் தோல்வியும் சீரழிவும் தீவிரமாகத் தொடங்கி விட்டன. ஈராண்டுகளுக்கு முன்பு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே சி.பி.எம். கட்சியின் சரிவும் படுதோல்வியும் அப்பட்டமாகத் தெரியத் தொடங்கியது.

கடந்த 2009 நாடாளுமன்றத் தேர்தலில் நாடு தழுவிய அளவில் மொத்தம் 16 தொகுதிகளில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற முடிந்தது. 1967-இல் சி.பி.எம். கட்சி முதன் முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதிகளை விட இது குறைவு. நாடாளுமன்றத்தில் 3ஆ-வது பெரிய ஓட்டுக் கட்சியாக இருந்த சி.பி.எம். 8ஆ-வது இடத்துக்குத் தள்ளப்பட்டது. வாக்குகளின் எண்ணிக்கை சதவீதமும் குறைந்து, இதுவரை கண்டிராத மிக மோசமான தோல்வியை அக்கட்சி சந்தித்தது.

வங்கத்தின் போலி கம்யூனிச ‘சிங்கம்’ ஜோதிபாசு காலத்திலேயே தனியார்மய- தாராளமயத்தை ஆதரித்து, அந்நிய தனியார் முதலீடுகளை வரவேற்கும் இத்துரோகக் கொள்கை தொடங்கியது. 2001-இல் புத்ததேவ் முதல்வரானதும் இக்கொள்கை தீவிரமாக்கப்பட்டது. ‘‘எங்கள் கொள்கைகளை நாங்கள் தலைகீழாக மாற்றிக் கொண்டுள்ளோம்’’ என்று வெட்கமின்றி அறிவித்துக் கொண்டு, தனியார்மய-தாராளமயத்துக்குக் காவடி தூக்கினார் போலி கம்யூனிச முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. இதற்கு முன் புரட்சிகர வாய்வீச்சுடன் செய்துவந்த மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கைகளை, எவ்வித ஒப்பனையும் இல்லாமல் அப்பட்டமாகவும் மூர்க்கமாகவும் திணித்தார், புத்ததேவ். கடையடைப்புப் போராட்டங்களுக்குத் தடைவிதிப்பதாக முதலாளிகள் முன்னிலையில் உறுதியளித்தார். நந்திகிராமத்தில்

34 ஆண்டு கால போலி கம்யூனிச ஆட்சிக்கு சமாதி கட்டிய சமூக பாசிஸ்டு புத்ததேவ் பட்டாச்சார்யா. அதிருப்தியை அறுவடை செய்து ஆட்சியைப் பிடித்துள்ள பாசிச மம்தா பானர்ஜி.





படிப்பகம்

www.padippakam.com

இரசாயன ஆலை தொடங்க இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடிய இராணுவ சர்வாதிகாரி சுகார்டோவின் கூட்டாளியான சலீம் குழுமத்துடன் புத்ததேவ் ஒப்பந்தம் போட்டார். அது குறித்து விமர்சனங்கள் வந்தபோது, ‘‘மூலதனத்துக்கு நிறமில்லை, அதற்கு சித்தாந்தமுமில்லை’’ என்று வாதிட்டார்.

21-ஆம் நூற்றாண்டின் போலி கம்யூனிசத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்தான் புத்ததேவ். காலிப் பெருங்காய டப்பாவாக இருந்த போலி கம்யூனிசத்தையும் துடைத்தொழித்து சமூக பாசிசக் கட்சியாகப் பரிணமிக்க வைத்தவர்தான் திருவாளர் புத்ததேவ். எனவேதான், சோசலிச சீனாவை முதலாளித்துவப் பாதையில் இழுத்துச் சென்ற சீனாவின் டெங் ஷியாவோ பிங் போல, ‘‘வங்கத்தின் டெங்’’ என்று புத்ததேவ் பாராட்டப்பட்டார். தவறான கட்சியிலுள்ள சரியான மனிதராக முதலாளித்துவவாதிகளால் துதி பாடப்பட்டார். விப்ரோ நிறுவனத்தின் அதிபர் அசிம் பிரேம்ஜி, நாட்டின் மிகச் சிறந்த முதலமைச்சர் என்று புத்ததேவைப் பாராட்டினார்.

இதர ஓட்டுக் கட்சி அரசுகளைப் போலவே, மாநிலத்தின் தொழில்வளர்ச்சி என்ற பெயரில் விவசாயிகளிடமிருந்து விளைநிலங்களைப் பறித்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவ, உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளுக்கு கோடிகோடியாய் வரிப்பணத்தை வாரியிறைத்து பகற்கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம் விரித்தது, புத்ததேவ் தலைமையிலான ‘இடதுசாரி’ அரசு. சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் லால்காரிலும் விவசாயிகளிடமிருந்து விளைநிலங்களைப் பறித்த ‘இடதுசாரி’ அரசு, அதை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது பயங்கரவாத வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது. கட்சி அணிகளோ பாசிச குண்டர் படையாக வளர்த்தெடுக்கப்பட்டுப் போராடும் மக்கள் மீது வன்முறை- கொலை வெறியாட்டங்களில் ஈடுபட்டனர். இவையனைத்தும் மே.வங்க விவசாயிகள் சி.பி.எம். கட்சி மீது வைத்திருந்த அரைகுறையான நம்பிக்கையையும் முற்றாகப் பறித்து விட்டது. மே.வங்கத்தில் ‘இடதுசாரி முன்னணி’யின் முதலாவது அமைச்சரவையில் (1977-80) நிதியமைச்சராக இருந்தவரும் சி.பி.எம். கட்சியின் மீது இன்னமும் நம்பிக்கை வைத்துள்ளவருமான அசோக் மித்ரா, சிங்கூர் மற்றும் நந்திகிராமத்தில் போலீசும் சி.பி.எம். கட்சியின் குண்டர் படையும் நடத்திய பயங்கரவாதத்தை வெளிப்படையாகவே சாடுமளவுக்கு அக்கட்சி அறிவுத்துறையினரிடமும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப்போனது.

மறுபுறம், சி.பி.எம். இன் உள்ளூர் தலைவர்களான அனுஜ் பாண்டே போன்ற சிவப்பு ஜமீன்தார்களே கட்சி மற்றும் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு, ஊழலில் ஊறித் திளைத்து மக்களிடம் அதிகாரத் திமிருடன் நடந்து கொண்டனர். மாநிலமெங்கும் ரேஷன் கடை ஊழலுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்களும், சி.பி.எம். தலைவர்களின் வீடுகள் சூறையாடப்பட்டதும் சி.பி.எம். மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பையும் குமுறலையும் வெளிச்சம் போட்டுக் காட்டின. தேசிய ஊரக வேலை உத்திரவாதத் திட்டம் போன்ற கவர்ச்சிவாதத் திட்டங்களோ, பெயரளவிலான சமூகநலத் திட்டங்களோ கூட செயல்படுத்தப்படாமல் அம்மாநிலத்தில் முடங்கிக் கிடந்தன. சிறுபான்மை முஸ்லிம்கள் மே.வங்கத்தில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக சச்சார் கமிட்டி சுட்டிக் காட்டிய பின்னரும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், முஸ்லிம்கள் சி.பி.எம். கட்சி மீது அதிருப்தியில் இருந்தனர். கடந்த 2008-ஆம் ஆண்டில் நடந்த உள்ளாட்சித் தேர்தலின் போதே, மக்களின் அதிருப்தி வெளிப்பட்டது.

நிலச் சீர்திருத்தம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மே.வங்கம், நாடு முழுவதுமான விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் வரிசையில் ஆறாவது இடத்தில் இருக்கிறது. விவசாயிகளுக்கு நிலத்தை வழங்கியிருப்பதாகக் கூறிக் கொள்ளும் சி.பி.எம். அரசு, மறுபுறம் விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக ஒரு சட்டத்தை இயற்றி பன்னாட்டு நிறுவனங்கள் ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபடவும், தனியார் விவசாயக் கிடங்குகள் அமைத்துக் கொள்ளவும் அனுமதியளித்தது. பிற மாநிலங்களில் இதர முதலாளித்துவக் கட்சிகள் மறுகாலனியாக்கக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருவதுபோலத்தான், புரட்சி சவடால் அடிக்கும் சி.பி.எம். கட்சியும் மே.வங்கத்தில் செயல்படுத்தியது. அரசு தானியக் கிடங்குகள் புறக்கணிக்கப்பட்டதால், விவசாயிகள் நிர்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெப்சியின் லேய்ஸ் சிப்ஸ் தயாரிப்புக்காக அரசின் சேமிப்புக் கிடங்குகள் ஒதுக்கப்பட்டதை எதிர்த்து அண்மையில் ஹூக்ளி மாவட்ட உருளை விவசாயிகள் நடத்திய போராட்டமே இதை நிரூபிக்கப் போதுமானது.

தெற்கு கொல்கத்தாவிலுள்ள அரசு காசநோய் மருத்துவமனையைத் தனியாருக்குத்

ஹர்மத் வாகினி: கட்சிக் கொடியைத் தலையிலே கட்டிக் கொண்டு மோட்டார் சைக்களில் அணிவகுப்பு நடத்தி உழைக்கும் மக்களை அச்சுறுத்தும் சி.பி.எம். கட்சியின் பாசிச பயங்கரவாதக் குண்டர் படை.






படிப்பகம்

www.padippakam.com

தாரை வார்த்தது உள்ளிட்டு மருத்துவம், கல்வி முதலான அனைத்திலும் அரசுத் துறைகள் புறக்கணிப்பட்டு தனியார்மய நடவடிக்கைகள் தீவிரமானதால், ஆட்சிக்கு எதிரான மனநிலையில்தான் மக்கள் இருந்தனர்.சிங்கூர் மற்றும் நந்திகிராமப் போராட்டங்களுக்குப் பெயரளவில் ஆதரவு தெரிவித்து சி.பி.எம். அட்டூழியங்களை அம்பலப்படுத்தியதால், திருணாமுல் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜியை மாற்றாக கருதி மக்கள் வாக்களித்துள்ளனர்.



கார்ப்பரேட் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்ட ‘வங்கத்தின் டெங்’: தரகுப் பெருமுதலாளி டாடாவுடன் மே.வங்க போலி கம்யூனிச முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. (கோப்புப் படம்)

சி.பி.எம். கட்சியின் மிக முக்கிய அடிப்படை பலமாக இருந்தது, அதன் தொழிற்சங்கங்கள். சி.பி.எம். அரசு முதலாளிகளுக்கு ஆதரவாக நின்றதால், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிராக இருப்பதால், அதன் தொழிற்சங்கங்கள் இன்று செயலிழந்து விட்டன. வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களோடு வரம்பிட்டுக் கொண்டதால், அத்தகைய சங்கங்கள் இன்று திரிணாமுல் காங்கிரசுக்குத் தாவி விட்டன. தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அரசியல்படுத்தாமல் வெறும் பொருளாதாரவாதக் கோரிக்கைகளுக்காகத் திரட்டி, அதனூடாக வாக்கு வங்கியை கட்டமைத்த சி.பி.எம். -இன் உத்தி இப்போது அதற்கே எதிரானதாகத் திரும்பிவிட்டது. இன்று அக்கட்சியில் இருக்கும் உறுப்பினர்களில் 90 சதவீதம் பேர் ‘இடது முன்னணி’ ஆட்சிக்கு வந்தபின் கட்சிக்கு வந்தவர்கள். இவர்களைப் பொறுத்தவரை புரட்சிக்கான அர்ப்பணிப்பும் சோசலிசமும் வெறும் கதையாடல்கள் மட்டுமே. பெறுவதற்காகத்தான் இவர்கள் கட்சிக்கு வருகிறார்களே தவிர, இழப்பதற்காக அல்ல. இத்தகைய பிழைப்புவாதமும் துதிபாடிகளின் கூட்டமும்தான் இன்று கட்சியின் அணிகளாகிவிட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, காங்கிரசு - பா.ஜ.க.வுக்கு மாற்று என்ற பெயரில், நேற்றுவரை பா.ஜ.க.வுடனும் காங்கிரசுடனும் கூடிக் குலாவிய ஜெயலலிதா, சந்திரபாபு நாயுடு போன்ற கடைந்தெடுத்த பாசிஸ்டுகளுடன் கூட்டணி கட்டிக் கொண்ட சி.பி.எம். கட்சியின் பச்சையான சந்தர்ப்பவாதம் நாடெங்கும் நாறிப்போயுள்ளது.

சி.பி.எம்.-இன் கோட்டையாகச் சித்தரிக்கப்பட்ட மே.வங்கப் பெருந்தோல்வியிலிருந்து படிப்பினைகளைப் பெறக் கூட அக்கட்சித் தலைமை தயாராக இல்லை. சி.பி.எம். கட்சி வழக்கமாக பெற்றுவரும் வாக்குகளில் ஒருசில சதவீதமே குறைந்துள்ளது என்றும், மற்றபடி கட்சியின் அடிப்படை வாக்கு வங்கி அப்படியே நீடிப்பதாகவும் பூசி மெழுகுகிறார், செயலாளர் காரத் . தோல்விக்குப் பொறுப்பேற்று பொதுச்செயலர் பதவியிலிருந்து பிரகாஷ் காரத் விலகுவார், அதுபோல புத்ததேவ் பட்டாச்சார்யாவும் விலகுவார் என்றெல்லாம் ஊகங்களை ஊடகங்கள் வெளியிட்டன. ஆனால், அப்படிச் செய்தால் கோஷ்டிப் பூசல் இன்னும் தீவிரமாகி கட்சியே கலகலத்துப் போய்விடும் என்பதால், உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என்னைச் சொல்லி குற்றமில்லை என்று எந்தத் தரப்பும் அடுத்தவர் மீது பழி போடாமல், ஒன்றையொன்று அனுசரித்துப் போவது என்று தீர்மானித்துள்ளதால் கட்சித் தலைமையில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை.

சிங்கூரில் டாடாவுக்காக நிலங்கள் பறிக்கப்பட்டபோது விவசாயிகளின் போராட்டத்தை ஆதரித்து சவடால் அடித்த மம்தா, இப்போது பதவியைப் பிடித்ததும் தமது கட்சி மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் இடையூறாக இருக்காது என்கிறார். தமிழகத்தில் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் மாறிமாறி ஆட்சிக்கு வருவதைப் போல, இனி மே.வங்கத்திலும் நடக்கலாம். நாய்களுக்குப் பதில் நரிகள் நாட்டாமை செய்யலாம். ஏனெனில், அடிப்படையில் மறுகாலனியக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துவதில் சி.பி.எம். கட்சிக்கும் திரிணாமுல் காங்கிரசுக்கும் கொடியைத் தவிர இதர வேறுபாடு ஏதுமில்லை.

இப்படுதோல்வியிலிருந்து சி.பி.எம். மீண்டுவிட முடியுமா? மக்களின் நம்பிக்கையைப் பெற்று மீண்டும் தேர்தல் வெற்றியையும் பழைய நிலையையும் அக்கட்சி தக்கவைத்துக் கொள்ள முடியுமா? ஒருக்காலும் சாத்தியமில்லை. ஏனெனில், தனியார்மயம்-தாராளமயம்- உலகமயம் எனும் ஆளும் வர்க்கங்களின் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கு எதிரான மாற்றுக் கொள்கைகளோ திட்டங்களோ சி.பி.எம். கட்சியிடம் இல்லை. இதுவும் போதாதென்று இதர ஆளும் வர்க்கக் கட்சிகளைப் போல சி.பி.எம். கட்சியும் கோடீசுவரக் கட்சியாக மாறியிருப்பதோடு, பாசிச குண்டர் படையையும் கட்டியமைத்துள்ளது. இனியும் இக்கட்சி உழைக்கும் மக்களுக்காகப் போராடும் என்று நம்புவதற்கு அடிப்படையே இல்லை. புதைந்து கொண்டிருக்கும் சி.பி.எம். கட்சியை புரட்சியை நேசிக்கும் உழைக்கும் மக்கள் இனி நம்பி ஏமாறுவதற்கும் தயாரில்லை.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

## கனிமொழி கைது:

# காங்.-சி.பி.ஐ. கூட்டணியின் கண்ணாமூச்சி ஆட்டம் தொடர்கிறது

**அரசியல் உள்நோக்கத்துடன்தான் 2-ஜி வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது என்பதை கனிமொழி கைதும் நிரூபிக்கிறது.**

**தி**.மு.க.வின் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகளுமான கனிமொழி, 2-ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் வழக்கில் ''கூட்டுச் சதியாளர்'' எனத் துணை குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ள அவர் சாட்சியங்களைக் கலைக்க வாய்ப்புள்ளதாகக் கூறி, கனிமொழியின் பிணை மனு சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு, அவர் விசாரணைக் கைதியாக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் கனிமொழியின் பெயர் அடிபடத் தொடங்கியதும், கட்சியின் உயர்நிலை செயல்திட்டக் குழுவைக் கூட்டி, ''இது கனிமொழியின் மீதான பிரச்சினை இல்லை. கட்சியின் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்தும் பிரச்சினை'' என்று கருணாநிதி பொங்கினார். ''கனிமொழி என் மகள் மட்டுமல்ல, இந்தக் கட்சிக்காக பெரிதாகத் தொண்டாற்றியவர். அவரும் அவருடைய தாயாரும் படுகிற பாட்டை என்னால் சொல்ல முடியவில்லை'' என்று கட்சி நிர்வாகிகளிடம் தழுதழுத்தார். படித்த வேலையில்லா இளைஞர்களுக்காக வேலைவாய்ப்பு முகாம் ஏற்பாடு செய்தார், சென்னை சங்கமம் கலைநிகழ்ச்சி நடத்தினார் என்பதைத் தவிர, கட்சிக்காக கனிமொழி ஆற்றியுள்ள 'தொண்டு' பற்றி அவரால் பெரிதாக ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை.

கருணாநிதி உட்பட தி.மு.க.வில் பலர் சிறை சென்றிருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் ஒரு போராட்டப் பின்னணி இருந்தது. ஆனால், ஊழல் குற்றச்சாட்டுக்காக சிறையிடப்படுவது அப்படிப்பட்டதல்ல என்ற சாதாரண உண்மைகூட கருணாநிதிக்குத் தெரியாமல் குடும்பப் பாசம் அவரது கண்களை மறைக்கிறது. 'தகத்தகாய சூரியன்' ராசா கைது செய்யப்பட்டபோது, ''தலித் என்பதால் அவர் பழிவாங்கப் பட்டுள்ளார், இது ஆரிய சூழ்ச்சி'' என்று சாடிய கருணாநிதி, கனிமொழிக்காக பிரபல 'ஆரிய' வழக்குரைஞரான ராம்ஜெத்மலானியை வாதாட வைத்தார். இத்தனை நாட்களாகச் சிறையிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராசாவைப் பார்க்கப் போகாத கருணாநிதி, இப்போது கனிமொழி கைதானவுடன் டெல்லிக்கு ஓடுகிறார்.

''கனிமொழிக்கு இரண்டு கோடி ரூபாய் கொடுத்து கலைஞர் டிவியில் பங்குதாரராகச் சேர்த்தது நான்தான், அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை'' என்று உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதி, தன்னையும் தன் குடும்பத்தாரையும் எந்தத் தவறும் செய்யாத யோக்கிய சிகாமணிகளாகக் காட்டி ஏய்ப்பதற்கு அவர் கடுகளவும் கூச்சப்படவில்லை. குடும்பமும் வாரிசுகளுமே கருணாநிதிக்குக் கட்சியாகிவிட்டதால், அவரது பேச்சும் எழுத்தும் செயலும் அவரது கட்சிக்காரர்களாலேயே நியாயப்படுத்த முடியாதபடி போய்விட்டது.

மறுபுறம், 2-ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் மிகத் தாமதமாக துணை குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, அதில் கனிமொழியை கூட்டுச் சதியாளர் என்று சி.பி.ஐ. சேர்த்துள்ளது. இந்த ஊழலில் ஆதாயமடைந்துள்ள டாடா மற்றும் ரிலையன்ஸ் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யக் கோரும் பிரசாந்த் பூஷணின் மனுவை இழுத்தடிக்கும் சி.பி.ஐ., கனிமொழி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில்தான் முனைப்பு காட்டியது. பிணை வழங்குவதற்கான வழக்கைத் தேவையே இல்லாமல் தேர்தல் முடிவு வரும்வரை நீட்டித்து, தேர்தல் முடிவுக்குப் பின்னர் பிணையை மறுத்து விசாரணைக் கைதியாக சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளது, சிறப்பு நீதிமன்றம். பின்னர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் பிணை கோரிய போதிலும், அதுவும் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

2-ஜி அலைக்கற்றை உரிமம் வழங்கியதில் காங்கிரசு அமைச்சர்களுக்கும் பங்கிருக்கிறது என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேசமயம், தி.மு.க.வின் தயாநிதி மாறன் முன்பு தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தபோது மலேசியாவின் மாக்சிஸ் நிறுவனத்துக்குச் சலுகை காட்டிய வகையில் ரூ.700 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக இன்னுமொரு துணை குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. தாக்கல் செய்யப் போவதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. 2-ஜி அலைக்கற்றை ஊழல் கொள்ளையைக் கண்டு குமுறும் மக்களின் கோபத்தைத் தணிக்க காங்கிரசின் கூட்டணிக் கட்சியான தி.மு.க. பலிகிடாவாக்கப்பட்டிருக்கிறது. இவையனைத்தும் ஆளும் காங்கிரசுக்குத் தொடர்பில்லாமல் சி.பி.ஐ. மற்றும் நீதித்துறையால் தன்னிச்சை



படிப்பகம்

www.padippakam.com



பொதுச் சொத்தை கார்ப்பரேட் கொள்ளையர்களுக்குப் பந்தி பரிமாறியதில் சிக்கிக் கொண்ட முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ராசா. கொள்ளையில் ஆதாயமடைந்த ராசாவின் கூட்டாளி கனிமொழி.

யாக நடத்தப்பட்டவை என்று நம்ப முடியாது. தி.மு.க.வை மிரட்டிப் பணிய வைக்க காய் நகர்த்தும் ஆளும் காங்கிரசு கும்பலின்அரசியல் உள்நோக்கம், சி.பி.ஐ. மற்றும் நீதித்துறையின் விசாரணை ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்கிறது.

தனியார்மயம் - தாராளமயம் என்ற மறுகாலனியாக்கக் கொள்கை தீவிரமாக்கப்பட்டதும், எல்லாத் துறைகளிலும் ஊழலும் கார்ப்பரேட் கொள்ளையும் நீக்கமற நிறைந்து விட்டது. தொலைத் தொடர்புத் துறை என்றாலே ஊழல் கொள்ளைக்கான துறைதான் என்பது தனியார்மயம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே நிரூபணமாகியுள்ளது. இருப்பினும், இத்தகைய ஊழல்- கொள்ளைகளில் ஒரு சில மட்டுமே அரசியல் உள்நோக்கத்துக்காக ஊதிப் பெருக்கப்படுகிறது. தானும் நடவடிக்கை எடுப்பதுபோல ஆளும் காங்கிரசு கும்பலும் நாடகமாடுகிறது.

2-ஜி அலைக்கற்றை ஊழல் மட்டுமல்; ஆதர்ஷ் ஊழல், எஸ் பேண்ட் ஊழல், காமன்வெல்த் ஊழல் - என அடுத்தடுத்து அம்பலமாகிவரும் கார்ப்பரேட் கொள்ளையால், பொதுமக்கள் மத்தியில் இன்றைய அரசியலமைப்பு மீது வெறுப்பும் நம்பிக்கையின்மையும், அரசியல்வாதிகள் மீது ஆத்திரமும் அதிகரித்து வருகிறது. இந்தக் குமுறல்கள் எரிமலையாகி வெடிப்பதற்கு முன் அதைத் தணிப்பதற்கும், இன்றைய அரசியலமைப்பு முறை மீது மக்களுக்கு நம்பிக்கையூட்டவும், சில அவசியமான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஆளும் வர்க்கங்களுக்கு எழுந்துள்ளது.

ஊழல் தடுப்பு ஆணையத்தை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள்; ராசா, கனிமொழி போன்றோரையும் ஒரு சில கார்ப்பரேட் நிறுவன மேலாண்மை இயக்குநர்களையும் கைது செய்திருப்பது - ஆகியன ஊழல் தடுப்பு நடவடிக்கைகளாகக் காட்டப்படுகிறது. சி.பி.ஐ.யும் உச்ச நீதிமன்றமும் ஊழலைத் தடுக்க சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் காட்டி, அவற்றைப் பிரச்சாரப்படுத்தி, நிலவுகின்ற அரசியலமைப்பு முறை மீது நம்பிக்கையூட்ட முயற்சிக்கின்றனவே தவிர, கொள்ளையர்களைத் தண்டித்து அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்ய முன்வரவில்லை. அதனால்தான், மன்மோகன் அரசாங்கத்தின் இரண்டாமாண்டு நிறைவு விருந்தில், ஊழலை ஒழிக்கப் போவதாக மன்மோகனும் சோனியாவும் கூசாமல் சவடால் அடித்துள்ளனர்.

கனிமொழி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்து யார் கைது செய்யப்படுவார்கள், ரெய்டு வருகிறது, குற்றப்பத்திரிகை தயாராகி விட்டது என்று மிரட்டிப் பணிய வைக்கும் வகையிலான பொய்களையும் வதந்திகளையும் கிசுகிசுக்களையும் வெளியிட்டு பரபரப்பூட்டுவதே பார்ப்பன ஊடகங்களின் உத்தியாக உள்ளது. கருணாநிதியும் அவரது கட்சியும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலன் காக்கும் சக்திகள்தான் என்ற போதிலும், வட இந்திய ஊடகங்களும் தமிழகத்தின் பார்ப்பன ஊடகங்களும் கனிமொழியின் கைதை தீராப் பகைமையோடு சித்தரிக்கின்றன. 'நான் முந்தைய கருணாநிதி இல்லை, கார்ப்பரேட் கொள்ளைக்குத் துணைநின்று பார்ப்பன தேசியத்துக்குப் பல்லக்குத் தூக்குபவர்தான்' என்று கருணாநிதி சத்தியம் செய்தாலும், அவை இன்னமும் வன்மத்தை கைவிடவில்லை என்பது இப்போதும் நிரூபணமாகியுள்ளது.

கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு ஊறுநேராமல், அதேசமயம் நாட்டு மக்களின் அதிருப்திக்கு வடிகால் வெட்டி, இன்றைய அரசியலமைப்பு முறைக்குள் தீர்வைத் தேடும் நோக்கில் தற்போது சி.பி.ஐ.யும் நீதித்துறையும் காட்டிவரும் சூரத்தனம் குறிப்பிட்ட வரம்புக்குமேல் செல்லவும் முடியாது. ஏனெனில், இத்தகைய ஊழல்கள் அனைத்தும் தோண்டத்தோண்ட கார்ப்பரேட் முதலாளிகளை நோக்கித்தான் செல்கின்றன என்பதால், சி.பி.ஐ. நடத்திவரும் ரெய்டு, விசாரணை, கைது எனும் இந்த கண்ணாமூச்சி ஆட்டம் எந்த அளவுக்குப் போகும் என்பதை யாவரும் புரிந்து கொள்ள முடியும்.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

### ஒசாமா பின்லேடன் படுகொலை:

# அமெரிக்க பயங்கரவாதம்!

## தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் இராக், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்தியிருக்கும் போர்க்குற்றங்களுக்கு நீதி கிடைப்பது எப்போது?

அரபு நாடுகளில் ஜனநாயகத்திற்காக நடைபெற்று வரும் போராட்டங்கள், அல்-காய்தா போன்ற முசுலீம் தீவிரவாத அமைப்புகள் அம்மக்களிடம் செல்வாக்கு செலுத்தவில்லை என நிரூபித்து வரும் வேளையில், அல்-காய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க ஏகாதிபத்தியம் சுட்டுக் கொன்றுள்ளது. போர்க் குற்றமாகக் கருதத்தக்க இப்படுகொலையை, ஏதோ வரலாற்றுச் சாதனையைப் போலப் பீற்றி வருகிறது, அமெரிக்கா. மேலும், அல்-காய்தா தலைவர் ஒசாமா பின்லேடனைச் சுட்டுக் கொன்றதன் மூலம், அமெரிக்காவில் செப்.11,2001 அன்று நடந்த தாக்குதல்களுக்கு நீதி கிடைத்துவிட்டதாகக் கூறி வருகிறார், அமெரிக்க அதிபர் ஒபாமா. பின்லேடன் நிராயுதபாணியாக இருந்த நிலையில், அவரை அமெரிக்கக் கப்பற் படையைச் சேர்ந்த கமாண்டோக்கள் சட்டவிரோதமாகச் சுட்டுக் கொன்றதைப் பற்றியோ, இத்தாக்குதலின்பொழுது பாகிஸ்தானின் இறையாண்மை மீறப் பட்டிருப்பது பற்றியோ கேள்வி எழுப்பாத முதலாளித்துவப் பத்திரிகைகள், அமெரிக்க ஆளும் கும்பலைப் போலவே இப்படுகொலையைக் கொண்டாடி வருகின்றன.

இன்று பயங்கரவாதியாகவும், தீய சக்தியாகவும் அமெரிக்காவால் முன்னிறுத்தப்படும் ஒசாமா பின்லேடனை உருவாக்கி, வளர்த்துவிட்டதே அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் என்பதையும்; அல்-காய்தாவின் பயங்கரவாதப் படுகொலைகளைவிட, தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் கடந்த பத்தாண்டுகளாக அமெரிக்காவும், அதனின் ஐரோப்பிய கூட்டணி நாடுகளும் ஆப்கானிலும், இராக்கிலும், பாகிஸ்தானிலும் நடத்திவரும் போரும் பயங்கரவாதப் படுகொலைகளும்தான் உலக மக்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்பதையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பின்லேடனின் மரணத்தைப் பற்றிப் பேச முடியாது. எனினும், அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதனின் அடிவருடி அரசுகளும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் இந்த சமீபகால வரலாற்று உண்மைகளை மூடிமறைப் பதில் குறியாக இருக்கின்றன.

அமெரிக்காவில் பத்தாண்டுகளுக்கு முன்பு உலக வர்த்தக மையத்தின் மீதும், பெண்டகன் மீதும் நடத்தப் பட்ட தாக்குதல்களுக்கு அல்-காய்தாவும், தாலிபானும் தான் காரணமெனக் குற்றஞ்சுமத்தி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், தனது குற்றச்சாட்டை நிரூபிக்கும் முக்கியமான ஆதாரங்கள் எதையும் இதுநாள்வரை முன்வைக்கவில்லை. அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐ.-இன் தலைவராக இருந்த ராபர்ட் முல்லர், இத்தாக்குதல்கள் தொடர்பாக 2002-ஆம் ஆண்டு நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்புக் கூட்டத்தில், ''வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு மிக மிகத் தீவிரமாக நடத்தப்பட்ட விசாரணைக்குப் பின், இத்தாக்குதல்கள் தொடர்பான சதித் திட்டம் ஆப்கானில் தயாரிக்கப்பட்டாலும், அது ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஜெர்மனியில் இருந்துகொண்டுதான் செயல்படுத்தப்பட்டதாகத் தாங்கள் நம்புவதாக '' அறிவித்தார்.

இந்த நம்பிக்கையையும், இந்தத் தாக்குதல்களைத் தாங்கள்தான் நடத்தியதாக அல்-காய்தா அளித்த சுய வாக்குமூலத்தையும் தவிர, வேறெந்த ஆதாரமும்

நிராயுதபாணியான நிலையில், மிகக் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடன்.





படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் கிடையாது. எனினும் அமெரிக்கா, தனது குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைப் புலனாய்வு செய்து கண்டுபிடிப்பதற்கு முன்பே, தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் ஆப்கான் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்தது. அல்-காய்தாவுக்கும் இராக்கின் அதிபராக இருந்த சதாம் உசேனுக்கும் இடையே நெருக்கமான உறவு இருப்பதாகக் கூறி, இராக் மீதான ஆக்கிரமிப்புப் போரையும் நியாயப்படுத்தியது. ஆனால், அமெரிக்கா இராக்கை ஆக்கிரமித்து, சதாம் உசேன் ஆட்சியைத் தூக்கியெறிந்த பிறகுதான், அந்நாட்டில் அல்-காய்தா உருவாகி வளர்ந்தது.

பின்லேடன் பாகிஸ்தானிலுள்ள அபோட்டாபாத் நகரில் இரகசியமாகத் தங்கியிருந்ததையும், மே 1 அன்று நள்ளிரவில் அவர் தங்கியிருந்த பங்களாவைச் சுற்றி வளைத்து, 40 நிமிட நேரத்திற்குள் அவரைச் சுட்டுக்கொன்று, அவரது பிணத்தை அங்கிருந்து எடுத்துச் சென்றதையும் ஏதோ வரலாற்றுச் சாதனை போலவும், மயிர்க்கூச்செறியும் சாகச நடவடிக்கை போலவும் அமெரிக்காவும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் மாய்ந்துமாய்ந்து சொல்லி வருகின்றன. அமெரிக்கா பின்லேடனைப் பிடிப்பதற்கு இப்படி கஷ்டப்பட்டிருக்கவும் வேண்டியதில்லை; பத்தாண்டு காலத்தையும், ஏறத்தாழ 65 இலட்சம் கோடி ரூபாயையும் வீணடிருத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

பின்லேடன் அல்-காய்தா இயக்கத்தை 1988-ஆம் ஆண்டே தொடங்கிவிட்டாலும், அமெரிக்காவிற்கும் பின்லேடனுக்கும் இடையே இருந்துவந்த உறவு, முதல் இராக் ஆக்கிரமிப்புப் போருக்குப் பிறகுதான் முறியத் தொடங்கியது. முதல் இராக் ஆக்கிரமிப்புப் போருக்குப் பின் சவூதி அரேபியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்லேடன், சூடானில் தஞ்சமடைந்தார். பின்லேடன் சூடானில் தங்கியிருந்த நாட்களில், அவர் தனது குடும்பத் தொழிலைத்தான் கவனித்து வந்தாரேயொழிய, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என சூடான் அரசு கூறியிருக்கிறது. எனினும், அமெரிக்கா பின்லேடனை சூடானிலிருந்து வெளியேற்றக் கோரி, அந்நாட்டு அரசிற்கு நிர்பந்தம் கொடுத்தது. சூடான் அரசு பின்லேடனை சவூதி அரேபியாவிடமோ அல்லது அமெரிக்காவிடமோ ஒப்படைக்கத் தயாராக இருந்தாலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் பின்லேடனை சோமாலியாவுக்கு அனுப்பக் கூடாது என்று மட்டுமே கூறியது. இதனையடுத்து, பின்லேடன் மீண்டும் ஆப்கானுக்குச் செல்ல, தாலிபான் அரசு அவருக்குத் தஞ்சம் அளித்தது. அமெரிக்கா அளித்த இந்த வாய்ப்பை, பின்லேடன் தனது இயக்கத்தை வளர்ப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

அமெரிக்காவில் நடந்த தாக்குதல்களுக்குப் பின், ''தகுந்த ஆதாரங்களை அளித்தால், பின்லேடனை சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது ஏதாவதொரு மூன்றாம் உலக நாட்டிலோ ஒப்படைத்து விசாரிப்பதற்குத் தயாராக இருப்பதாக'' தாலிபான் அரசு அறிவித்தது. அமெரிக்கா, தாலிபானின் இந்தக் கோரிக்கையை வேண்டுமென்றே நிராகரித்தது. அமெரிக்கா வசம் அல்-காய்தா மற்றும் தாலிபானுக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இல்லை என்பதனால்தான் அமெரிக்கா தாலிபானின் இக்கோரிக்கையை நிராகரித்ததாகக் கருத முடியாது. உலக நாடுகளின் மீது தனது மேலாதிக்கத்தை இறுக்கிக் கொள்ளவும், அதற்காகத் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் ஆக்கிரமிப்புப் போர்களை நடத்துவதற்குக் கிடைத்த வாய்ப்பாகவே செப்.11 தாக்குதல்களைக் கருதியதால்தான், அமெரிக்கா இக்கோரிக்கையை நிராகரித்தது.

அமெரிக்க வக்கிரம்: பின்லேடன் சுற்றி வளைக்கப்பட்டுக் கொல்லப்படுவதை, வெள்ளை மாளிகையில் இருந்தபடியே ''ஆன்-லைனில்'' பார்த்து ரசிக்கும் அமெரிக்க அதிபர் ஒபாமா(இடமிருந்து இரண்டாவது) மற்றும் அரசு-இராணுவ அதிகாரிகள்.



பின்லேடனின் அல்-காய்தா இயக்கம் அமெரிக்காவில் நடத்தியதாகச் சொல்லப்படும் தாக்குதல்களில் இறந்த வெள்ளையர்களைவிட, அல்-காய்தாவை அழிப்பது என்ற பெயரில் அமெரிக்கா ஆப்கானிலும், இராக்கிலும், பாகிஸ்தானிலும் நடத்திவரும் கொத்துக் குண்டு வீச்சு, செறிவுகுறைந்த அணுகுண்டு தாக்குதல், ஆளில்லா விமானத் தாக்குதல், இரவு நேர தேடுதல் வேட்டைகள் போன்ற தாக்குதல்களில் கொல்லப்பட்ட ஏழை நாட்டு மக்களின் எண்ணிக்கை மிகமிக அதிகம்.

● கடந்த பிப்ரவரி மாதம் நேடோ படைப் பிரிவினர் ஆப்கானின் குனார் மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தின் மீது நடத்திய வான்வழித் தாக்குதலில், 13 வயதுக்கும் கீழான 40 குழந்தைகளும், 22 பெண்களும் உள்ளிட்டு 65 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து, மார்ச்



படிப்பகம்

www.padippakam.com




அமெரிக்கா, பாகிஸ்தானில் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் படுகாயமுற்ற சிறுவர்கள்;
அமெரிக்காவின் இப்பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்து பெஷாவர் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் (வலது).

*1 அன்று அதே குனார் மாகாணத்தில் நடத்தப்பட்ட மற்றொரு வான்வழித் தாக்குதலில் 14 வயதுக்கும் கீழான 9 குழந்தைகள் கொல்லப்பட்டனர்.*

● *2009-ஆம் ஆண்டில் 184 ஏவுகணைகளும், 66 லேசர் குண்டுகளும் ஆளில்லா விமானங்களின் மூலம் வீசியெறியப்பட்டுப் பல ஆப்கான் கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 2010-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்கள் மற்றும் இரவுநேர தேடுதல் வேட்டைகளில் கொல்லப்பட்ட ஆப்கான் மக்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும் எனக் கூறப்படுகிறது.*

● *வீக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்ட அமெரிக்க இராணுவ ஆவணங்களின்படி, அமெரிக்கா தலைமையிலான நேடோ படை 2004-ஆம் ஆண்டு தொடங்கி 2009-ஆம் ஆண்டு முடிய நடத்திய தாக்குதல்களில் 20,000 ஆப்கான் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இராக்கில் அமெரிக்கா நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போரில் 2008 முடிய 1,51,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியிருக்கிறது. அதே சமயம், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் லான்செட் என்ற மருத்துவ அறிவியல் இதழ் இராக்கில் நடந்துவரும் ஆக்கிரமிப்புப் போரில் 6,50,000 பேர் வரைக் கொல்லபட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.*

● *அமெரிக்கா, பாகிஸ்தானில் பதுங்கியிருக்கும் அல்-காய்தா தலைவர்களைக் குறிவைத்துத் தாக்கிக் கொல்வதற்காக, 2009-ஆம் ஆண்டில் ஆளில்லா விமானங்கள் மூலம் 44 தாக்குதல்களை நடத்தியது. இந்த 44 தாக்குதல்களில் ஐந்து அல்-காய்தா தலைவர்கள் கொல்லப்பட்ட அதே சமயம், இத்தாக்குதல்களால் உயிரிழந்த அப்பாவிகளின் எண்ணிக்கையோ 708-ஐத் தொட்டது.*

● *பாகிஸ்தானில் பதுங்கியிருந்த பைதுல்லா மெஹ்சூத் என்ற முக்கியமான தாலிபான் தலைவரைக் கொல்வதற்காக ஆளில்லா விமானங்கள் மூலம் 15 தாக்குதல்களை நடத்தியது, அமெரிக்கா. இந்த ஒருவரைக் கொல்வதற்காக நடத்தப்பட்ட இந்த 15 தாக்குதல்களில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 350 ஆகும். இதுபோல, கடந்த ஜனவரி 2010-இல் மட்டும் பாகிஸ்தானில் 12 ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தி, மூன்று அல்-காய்தா தலைவர்களையும், 123 அப்பாவி பொதுமக்களையும் கொன்றது, அமெரிக்க இராணுவம்.*

அமெரிக்காவும், உலகமெங்கும் உள்ள அதனது அடிவருடிகளும் அல்-காய்தாவின் பயங்கரவாதத் தாக்குதல்களை ஊதிப் பெருக்கி, அமெரிக்காவின் இந்தப் போர்க் குற்றங்கள் அனைத்தையும் நியாயப்படுத்துகின்றனர்; ''பின்லேடனைப் போல பாகிஸ்தானில் பதுங்கியிருக்கும் மற்ற தீவிரவாதிகளையும், இது போன்ற அதிரடித் தாக்குதல்களை நடத்தி அழிப்போம்'' எனத் திமிராக அறிவிக்கிறார், அமெரிக்க அதிபர் ஒபாமா. பின்லேடன் கொல்லப்பட்ட ஓரிரு நாட்களுக்குள்ளாகவே, பாகிஸ்தான் மீது மற்றொரு ஆளில்லா விமானத் தாக்குதலை நடத்தி, 12 அப்பாவி பொதுமக்களைக் கொன்றுள்ளது, அமெரிக்கா. ''வீடியோ கேம்''களில் காணப்படும் போர் விளையாட்டுக்களைப் போல இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது, அமெரிக்கா. இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்கள் அமெரிக்கச் சிப்பாய்களின் சாவு எண்ணிக்கையைக் குறைத்துவிட்டதாகப் பீற்றிக் கொள்ளும் ஒபாமா, அத்தாக்குதல்களின் பொழுது கொத்துக்கொத்தாகக் கொல்லப்படும் ஏழை நாட்டு மக்களின் உயிரை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை.

சதாம் உசேனுக்குத் தூக்கு தண்டனை வழங்குவதற்காக ஒரு மோசடியான விசாரணை நாடகத்தை நடத்திய அமெரிக்கா, பின்லேடனுக்கு அந்த வாய்ப்பைக்கூட வழங்கவில்லை. ''நிராயுதபாணியாக இருந்த பின்லாடனைப் பிடித்து, அதன் பிறகே அவரைச் சுட்டுக் கொன்றதாக'' இந்தத் தாக்குதல் சம்பவத்தை நேரில் பார்த்த பின்லேடனின் 12 வயதான மகள் தமது குடும்பத்தை விசாரித்துவரும் பாகிஸ்தானின் இராணுவ அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறார். ''யூத இனப் படுகொலையை நடத்திய நாஜி கிரிமினல்கள்கூட ஒரு நியாயமான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கும்பொழுது,



படிப்பகம்

www.padippakam.com

பின்லேடனை இப்படிச் சட்டவிரோ தமான முறையில் கொல்ல வேண்டிய அவசியமென்ன?'' என்ற கேள்வியைப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் ஆர்வலர்களும் எழுப்பியுள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த தாலிபான் அமைப்பின் தலைவரான ஹகி முல்லா மெஹ்ஸுத், ''அமெரிக்கா பழங்குடியின மக்கள் வாழும் பகுதியில் நடத்திவரும் ஆளில்லா விமானத் தாக்குதலை நிறுத்தும் வரை, எமது தற்கொலைத் தாக்குதல்கள் தொடரும்'' என அறிவித்திருப்பதையும்; ஆப்கானைச் சேர்ந்த தாலிபான் அமைப்பு , ''அந்நியப் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறும் வரை எமது தாக்குதல்கள் தொடரும்'' என அறிவித்திருப்பதையும் இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும்.

ஒசாமா பின்லேடன் கொல்லப் பட்டது செப்.11 தாக்குதலுக்குக் கிடைத்த நீதி என்றால், இராக்கிலும், ஆப்கானிலும், பாகிஸ்தானிலும் அமெரிக்காவாலும், அதனின் ஐரோப்பியக் கூட்டணி நாடுகளின் இராணுவத்தாலும் பல இலட்சம் பேர் கொல்லப்பட்டதற்கு எந்த வழியில் நீதியைப் பெறுவது? என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் யாரும் தப்பிவிட முடியாது. இராக் மற்றும் ஆப்கானிலிருந்து மட்டுமல்ல, பல்வேறு அரபு நாடுகளிலும் இராணுவத் தளங்களை அமைத்துத் தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவம் அந்நாடுகளிலிருந்து வெளியேறுவதோடு, இந்நாடுகளில் அமெரிக்க இராணுவம் நடத்தியிருக்கும் போர்க் குற்றங்களுக்காக, அமெரிக்க அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ் (சீனியர்) தொடங்கி தற்போது அதிபராக இருக்கும் ஒபாமா வரை அனைவரையும் போர்க் குற்றவாளிகளாக அறிவித்து விசாரித்துத் தண்டிக்க வேண்டும் என்பதைத் தவிர, இக்கேள்விக்கு வேறு பதில் எதுவும் இருக்க முடியாது.

ஆனால், அமெரிக்க அதிபர் ஒபாமாவோ இராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றுவது என்ற நாடகத்தை நடத்தியிருக்கிறார்; ஆப்கானில் அமெரிக்க இராணுவத் தளத்தை அமைத்துவிட்டு, 2014-க்குள் படைகளை வெளியேற்றுவது எனத் திட்டமிட்டு வருகிறார்; இதற்காக, பாகிஸ்தான் மூலம் தாலிபானோடு ஒரு சமரச உடன்பாட்டை செய்து கொள்ள முயன்று வருகிறார், ஒபாமா. ஒருபுறம் இது போன்ற பஞ்சு மிட்டாய் நடவடிக்கைகளின் மூலமும், இன்னொருபுறம் அல்-காய்தா தலைவர்களைக் குறிவைத்துக் கொன்றொழிப்பதன் மூலமும் முசுலீம் பயங்கரவாதத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்து விடலாம் என மனப்பால் குடிக்கிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம்.

● செல்வம்




## “மரணப் பாலத்தை அகற்று! தற்காலிகத் தரைப்பாலத்தை அமைத்துக் கொடு!!”

### - அதிகார வர்க்கத்தின் அலட்சியப் போக்கைக் கண்டித்துப் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் - மாலூர் சாலையில், பாகலூர் அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பழுதடைந்த பாலத்தை உடைத்துப் புதிய பாலம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இங்கு தற்காலிக தரைப் பாலம் அமைக்காமல், ஐந்து அடி அகலத்தில் பொதுமக்கள் நடந்து செல்லும் வகையில் ஒரு குறுகலான பாலம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் ஆற்றைக் கடப்பதற்கும் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவதற்கும் இந்தப் பாலம் போதுமானதோ பொருத்தமானதோ அல்ல.

பெங்களூருக்கும் ஓசூருக்கும் காய்கறிகள் ஏற்றிச் செல்லும் விவசாயிகளும் வியாபாரிகளும் சுற்றுவழியில் செல்ல வேண்டியிருப்பதாலும், உழைக்கும் மக்கள் அவசரத்துக்கு மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால் 20 கி.மீ. தொலைவுக்குச் சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதாலும் பெரிதும் அவதிப்படுகின்றனர். ஒரு ஆட்டோகூடச் செல்ல முடியாமல் இத்தற்காலிகப் பாலம் அமைக்கப்பட்டு, இப்பாலத்தைக் கடக்க நீண்ட வரிசையில் காத்திருந்து செல்ல வேண்டியுள்ளதால், இப்பகுதி மக்கள் அன்றாடம் பெருந்துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். குறுகலான இந்த மரணப் பாலத்தை அகற்றிவிட்டு வாகனங்கள், பேருந்துகள் செல்லும் வகையில் தற்காலிக தரைப்பாலம் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சியரிடமும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடமும் பலமுறை இப்பகுதிவாழ் மக்கள் மனு கொடுத்து முறையிட்டுள்ள போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உழைக்கும் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தொடர்ந்து அலட்சியப்படுத்தும் அதிகார வர்க்கத்தின் திமிரை எதிர்த்தும், உடனடியாக தரைப் பாலம் அமைத்துத் தரக் கோரியும் இப்பகுதியில் இயங்கி வரும் பு.ஜ.தொ.மு; வி.வி.மு. ஆகிய அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக 23.5.2011 அன்று காலை பாகலூர் சர்க்கிள் அருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தின. பு.ஜ.தொ.மு. பாகலூர் பகுதிப் பொறுப்பாளர் தோழர் இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமை அமைப்பின் முன்னணியாளர்களும் பெலத்தூர் ஊராட்சித் தலைவர் மற்றும் விவசாயிகளும் வியாபாரிகளும் உழைக்கும் மக்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர். உழைக்கும் மக்களின் ஆதரவோடு அடுத்தக் கட்டப் போராட்டத்துக்கு இப்புரட்சிகர அமைப்புகள் ஆயத்தமாகி வருகின்றன.

-தகவல்: பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.



படிப்பகம்

www.padippakam.com



வில்லூர் கிராமத்தில் ஆதிக்க சாதியினரின் தெருவழியாகச் செல்லும் தாழ்த்தப்பட்டோர் வாகனத்தைத் தள்ளிக் கொண்டுதான் செல்ல வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள தீண்டாமைக் கொடுமை.

## தீண்டாமை தலைவிரித்தாடும் தமிழகம்:

# தேவை, புதிய பாதை!

‘**ச**மூகநீதி காத்த வீராங்கனை’யும், ‘சமத்துவப் பெரியாரும்’ மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கும் ‘அமைதிப் பூங்கா’வாகிய தமிழகத்தில், சாதிய அடக்குமுறை பேயாட்டம் போடுவதை அண்மையில் நடந்த சம்பவங்கள் நிரூபித்துள்ளன. படித்து முன்னேறிச் சொந்தக் காலில் நிற்க முயன்றால், தாழ்த்தப்பட்டோரை விட்டுவைக்க மாட்டோம் எனக் கருவிக் கொண்டிருக்கின்றனர், ஆதிக்க சாதிவெறியர்கள்.

அண்மையில் மதுரை-திருமங்கலம் வட்டத்திலுள்ள டி.கல்லுப்பட்டியை ஒட்டியுள்ள வில்லூர் கிராமத்தில், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த தங்கப்பாண்டியன் என்ற இளைஞர் பொதுத் தெருவில் மோட்டார் சைக்கிளில் சென்ற ‘மாபெரும்’ குற்றத்திற்காக, அகமுடையார் எனும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஐந்து பேர் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அகமுடையார்கள் வசிக்கும் மேலத்தெருவான காளியம்மன் கோவில் தெருவில் தாழ்த்தப்பட்டோர் சைக்கிளிலோ, செருப்பு அணிந்தோ செல்லக் கூடாது என சாதிக் கட்டுப்பாடு விதித்துத் தீண்டாமையை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இன்றுகூட அந்த வட்டாரத்தில் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் அகமுடையார் சாதியைச் சேர்ந்த மாணவர்களைத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ‘ஐயா’ என்றுதான் அழைக்க வேண்டும்.

அந்த ஊரில் வசிக்கும் குரு எனும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவரின் மகனாகிய தங்கப்பாண்டியன் ஆசிரியர் பயிற்சிக்குப் படித்து விட்டு, தற்போது வேலை தேடிக் கொண்டிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன் அவருடைய குடும்பத்தினர் சொந்தமாக 7 ஏக்கர் நிலம் வாங்கியது முதலாக அகமுடையார்கள் இக்குடும்பத்தினர் மீது வன்மத்தோடு இருந்து வந்துள்ளனர். தங்கப்பாண்டியனின் தந்தை வாங்கித் தந்த மோட்டர் சைக்கிளில் காளியம்மன் கோவில் தெருவழியாக வந்ததும், அகமுடையார் சாதியினர் அவரைக் குறிவைத்துத் தாக்கியுள்ளனர். தங்கப்பாண்டியன் இத்தாக்குதல் குறித்து போலீசு நிலையத்தில் புகார் கொடுத்ததால், சாதிவெறியர்கள் ஆத்திரமடைந்து தங்கப்பாண்டியனின் அண்ணனையும் தாக்கியுள்ளனர்.

தொண்ணூறுகள் வரை ஆதிக்கச் சாதியினரின் நிலத்தோடு கூலிகளாகப் பிணைக்கப்பட்டிருந்தபோது, அவர்கள் விதித்து வந்த கட்டுப்பாடுகளுக்கு எதிராக மறுபேச்சுப் பேசமுடியாமல் தாழ்த்தப்பட்டோர் சகித்துக் கொண்டிருந்தனர். இன்று விவசாயம் சீரழிக்கப்பட்டு நிலத்தோடு இரு தரப்புக்கும் ஒட்டுறவில்லை எனும் நிலை வந்த பின்னர், தாழ்த்தப்பட்டோர் படித்து முன்னேறுவதைக் கூட ஆதிக்கசாதியினர் சகித்துக் கொள்வதில்லை என்பதற்கு சாட்சியம்தான் வில்லூர் கிராமத் தாக்குதல்.

இதே போன்று, மதுரை - நத்தம் சாலையில் உள்ள பரளிபுதூர் -இந்திரா நகரில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மீது ஆதிக்க சாதி முத்தரையர்கள் கடந்த பிப்ரவரியில் தாக்குதல் நடத்தியுள்ளனர் . வி.சி. கட்சியின் பகுதிப் பொறுப்பாளர் அதியமான் என்பவரின் திருமண விழாவில் தொல்.திருமாவளவனின் உருவப்படமுள்ள ‘‘ப்ளக்ஸ்’’ தட்டியை வைத்திருந்ததையும், குடிநீர்த் தொட்டியின் மேலே வி.சி. கட்சியின் கொடியைக்



படிப்பகம்

www.padippakam.com

கட்டியிருந்ததையும் சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்க சாதி முத்தரையர்கள், திட்டமிட்டு இந்திரா நகர் தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதலை ஏவியுள்ளனர்.

நத்தத்தில் இருந்து மதுரை வரை உள்ள முத்தரையர் சாதியினரைத் திரட்டி வந்து இந்திரா நகர் தாழ்த்தப்பட்டோர் மீது கடந்த பிப்ரவரி 26-ஆம் தேதியன்று நடத்திய தாக்குதலில், நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளின் ஓடுகள் உடைக்கப்பட்டதோடு, 30 கூரை வீடுகளும் 20-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களும் கொளுத்தப்பட்டுள்ளன. பரளிபுதூரில் கடந்த ஒரு தலைமுறையாகத் தாழ்த்தப்பட்டோர், சாதி இந்துக்களுக்கு தமுக்கு அடிப்பது போன்ற அடிமை வேலை ஏதும் செய்வதில்லை. படித்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைகளுக்குச் சென்று, ஒருசிலர் சொந்தமாக நிலமும் வாங்கியுள்ளனர். இவ்வாறு தாழ்த்தப்பட்டோர் முன்னேறியதைப் பொறுக்க முடியாத ஆதிக்க சாதியின் ஆத்திரம்தான் இந்தத் தாக்குதல்களுக்கெல்லாம் காரணம்.

இதுதவிர, இன்னமும் நூற்றுக்கணக்கான ஊர்களில் இரட்டைக்குவளை முறையோடுதான் தேநீர்க் கடைகள் உள்ளன. பல ஊர்களில் தந்திரமாக, கண்ணாடி தம்ளர்களைப் பொதுவாக வைத்துக் கொண்டு ஆதிக்க சாதியைச் சேர்ந்த வயதானவர்களுக்கு டபாரா செட்டில் தேநீர் கொடுப்பதும், கேட்டால் 'வயதானவர்களின் சௌகரியத்துக்காக இந் நடைமுறை' எனச் சொல்லியும் சட்டத்தின் பிடியிலிருந்து நைச்சியமாகத் தப்பிக்கின்றனர். அல்லது, தம்ளர்களில் நுண்ணிய கோடு கிழித்து அடையாளம் ஏற்படுத்திக் கொண்டும் இரட்டைக்குவளை முறையை நடைமுறைப்படுத்துகின்றனர்.

தீண்டாமைக்கெதிரான சட்டங்கள் பலனளிக்காத நிலையில், 1989-இல் கொண்டுவரப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் மூலம் சாதியக் கொடுமையை ஒழித்து விடலாம் என்று தலித் இயக்கங்களும் அவற்றின் அறிவுத்துறையினரும் சொல்லி வருகின்றனர். ஆனால், உண்மைகளோ வேறாக இருக்கின்றன. '90-களில் நடந்த தென்மாவட்ட சாதிக்கலவர வழக்குகளில் இச்சட்டத்தின்படி நடந்த 386 வழக்குகளில், வெறும் 18 வழக்குகளில் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, கிடைத்த நீதி வெறும் 4.7% மட்டுமே. இச்சட்டத்தின்படி, தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டாலே அது தண்டனைக்குப் போதுமானதென நாடாளுமன்றம் தெளிவுபடுத்தி இருப்பினும், தீர்ப்பெழுதும் 'நீதி'பதிகளோ, பாதிக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால், 'குற்றம் நடத்தப்பட்டதற்குப் போதிய ஆதாரமில்லை' எனச் சொல்லி தண்டனையைக் குறைத்துத் தமது ஆதிக்க சாதிப் பாசத்தை நிரூபித்துள்ளனர். கயர்லாஞ்சி முதல் மேலவளவு முருகேசன் வழக்கு வரை இதுதான் நிலை எனும்போது, ஆதிக்கசாதியின் கொட்டத்தை இச்சட்டத்தின் மூலமே அடக்கி விடமுடியுமா?

அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் சாதிக் கொடுமைக்கு முடிவு கட்டலாம் என்றனர், தலித் இயக்கத்தினரும் அவற்றின் அறிவுத்துறையினரும். ஆனால், 2007-இல் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த மாயாவதியின் ஆட்சியில்தான் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல் உக்கிரமாக நடந்தது. குற்றவாளிகளைக் காப்பாற்ற மாயாவதியின் கட்சியே துணை போனது. தமிழகத்திலுள்ள தலித் கட்சிகளோ, ஆதிக்க சாதி வெறியர்களின் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடுவதைக் காட்டிலும், திராவிடக் கட்சிகளிடம் இரண்டு, மூன்று சீட்டுக்குக் காவடி எடுப்பதோடு முடங்கிப் போயுள்ளன.

வன்கொடுமைத் தடுப்பு சட்ட வழியோ, அதிகாரத்தைக் கைப்பற்றும் நாடாளுமன்ற-சட்டமன்ற வழியோ செல்லுபடியாகாத நிலையில், தீண்டாமைக் கொடுமைக்கெதிராகப் போராட இனி தாழ்த்தப்பட்டோர் மாற்றுப் பாதையில் அணிதிரள வேண்டியுள்ளது. வர்க்கப் போராட்டத்துடன் சாதி-தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தை ஒருங்கிணைத்துப் போராடுவதன் மூலமே, கம்யூனிசப் புரட்சியாளர்கள் செயல்படுத்திவரும் புதிய பாதையில் போராடுவதன் மூலமே தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்துக் கட்ட முடியும்.

● கதிர்

பரளிபுதூர்-இந்திரா நகரில் தாழ்த்தப்பட்டோர் மீது முத்தரையர் சாதிவெறியர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலின் சாட்சியம்.





படிப்பகம்

www.padippakam.com

## போபால் விஷவாயுப் படுகொலை:

# மீண்டும் அநீதி!




''இந்த அநீதியைச் சகித்துக் கொள்ள மாட்டோம்'' என்ற பதாகையைப் பிடித்தபடி, விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து போபாலில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

**போ**பால் விஷவாயு கொலை வழக்கில் தொடர்புடைய கேஷூப் மஹிந்திரா உள்ளிட்ட எட்டு இந்தியக் குற்றவாளிகளின் மீது சுமத்தப்பட்டிருந்த, பத்து ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கக்கூடிய கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கை (Culpable homicide), வெறும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே தண்டிக்கக்கூடிய குற்றமுறு கவனக்குறைவான (Criminal negligence) வழக்காக மாற்றி, உச்ச நீதிமன்றம் 1996-இல் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எந்தவிதத்திலும் மீறாமல் போபால் விஷவாயு கொலை வழக்கை விசாரித்துவந்த போபால் பெருநகர நீதிமன்றம், கேஷூப் மஹிந்திரா உள்ளிட்ட ஏழு இந்தியக் குற்றவாளிகளுக்கு (விசாரணையின் பொழுது ஒரு குற்றவாளி இறந்துபோனார்) இரண்டு ஆண்டுகள் தண்டனை அளித்த கையோடு, அவர்களுக்குப் பிணையும் வழங்கி கடந்த ஆண்டு தீர்ப்பளித்தது.

கொலைக் குற்றவாளிகளுக்குச் சாதகமான இத்தீர்ப்புக்கு எதிராக நாடெங்கும் கண்டனங்கள் எழுந்ததையடுத்து, உச்ச நீதிமன்றம் 1996-இல் இந்தியக் குற்றவாளிகளின் மீதான வழக்கை நீர்த்துப்போகச் செய்து அளித்த தீர்ப்பை மாற்றக் கோரி, மையப் புலனாய்வுத் துறை மறுசீராய்வு மனுவொன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இம்மனுவை விசாரித்த ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு மன்றம், ''இம்மனு தவறானது; பிழையான வாதம் கொண்டது'' எனக் கூறி, இம்மனுவை தள்ளுபடி செய்து கடந்த மே மாதம் தீர்ப்பளித்திருக்கிறது.

''சி.பி.ஐ., 14 ஆண்டுகள் கழித்து இச்சீராய்வு மனுவைத் தாக்கல் செய்வதற்குப் போதிய விளக்கம் அளிக்கவில்லை; 1996-இல் உச்ச நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலேயே, குற்றச்சாட்டை மாற்றித் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது; 1996-இல் அளிக்கப்பட்ட தீர்ப்பு, விஷவாயு படுகொலை வழக்கை விசாரித்துவந்த போபால் பெருநகர நீதிமன்றத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது; அந்நீதிபதி, அந்நீதிமன்றத்திற்குரிய உரிமையைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மரணம் விளைவிக்கும் குற்றவழக்காக மாற்றியமைத்து விசாரிக்கத் தவறிவிட்டார்'' எனத் தீர்ப்பில் கூறித் தன்னை யோக்கியவானாகக் காட்டிக் கொண்டுள்ளது, உச்ச நீதிமன்றம்.

குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை அளிக்கக்கூடிய வகையில் வழக்கைப் புனையும் அளவிற்குத் தன் முன் ஆதாரங்களும் சாட்சியங்களும் அளிக்கப்படவில்லை என உச்ச நீதிமன்றம் கூறுவது பச்சைப் பொய். போபாலில் அமைக்கப்பட்ட யூனியன் கார்பைடு ஆலை தொழில்நுட்பரீதியாகக் காலாவதியாகிப் போன ஆலை என்பதும், பாதுகாப்பு குறைபாடுகளால் அவ்வாலையில் பல விபத்துகள் நடந்திருப்பதும் ஏற்



படிப்பகம்

www.padippakam.com

கெனவே அம்பலமாகியிருந்த போதிலும், உச்ச நீதிமன்றம் இவ்வுண்மைகளை வேண்டுமென்றே சாட்சியங்களாக எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டது. மேலும் சி.பி.ஐ., போபாலில் அமைந்துள்ள யூனியன் கார்பைடு ஆலையிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளையும், அமெரிக்காவில் அமைந்துள்ள யூனியன் கார்பைடு ஆலைகளிலுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஒப்பிட்டு வழக்கை நடத்த முன்வரவில்லை. உச்ச நீதிமன்றம் இந்த ஓட்டைகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டுதான் இந்தியக் குற்றவாளிகளுக்குச் சாதகமாக வழக்கை மாற்றியமைத்துத் தீர்ப்பளித்தது.

1984-க்குப் பிறகு அமைந்த ஒவ்வொரு அரசும், அதில் பங்கேற்ற அனைத்து ஓட்டுக்கட்சிகளும் போபால் விஷவாயு வழக்கை நீர்த்துப் போகச் செய்வதற்கும், குற்றவாளிகளைத் தப்பவிடுவதற்கும், ஆதாரங்களை அழிப்பதற்கும் எடுத்த நடவடிக்கைகளை ஊரே அறியும். ஆனால், உச்ச நீதிமன்ற நீதிபதிகளோ நாட்டு நடப்பே தெரியாதவர்கள் போல, 14 ஆண்டுகள் கழித்துச் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ததற்கு சி.பி.ஐ.-யிடம் விளக்கம் கேட்கிறார்கள்; அதேசமயம், விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்விதக் காலதாமதமும் இன்றி 1996-இல் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை, விசாரணைக்குக்கூட எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்த அயோக்கியத்தனம் குறித்து விளக்கம் அளிக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தயாராக இல்லை.

1996-இல் இந்தியக் குற்றவாளிகளுக்குக் குறைவான தண்டனை அளிக்கக்கூடிய விதத்தில் வழக்கை மாற்றியமைத்து அளித்த தீர்ப்பை, மற்ற வழக்குகளின் தீர்ப்புகளைப் போல சாதாரணமாக அறிவிக்காமல், அத்தீர்ப்பை அரசியல் சாசனச் சட்டம் 142 - ஆவது பிரிவின் கீழ் அறிவித்தது, உச்ச நீதிமன்றம். இப்பிரிவின் கீழ் அறிவிக்கப்படும் தீர்ப்பை நாடு முழுவதும் அமுல்படுத்தக் கோரும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தனது தீர்ப்பை எதிர்த்து வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதையும், இந்தியக் குற்றவாளிகளுக்குச் சாதகமாக அளிக்கப்பட்ட தீர்ப்பை வேறெந்த நீதிமன்றமும் மாற்றிவிடுவதைத் தடுக்கும் பொருட்டும் தான் உச்ச நீதிமன்றம் அரசியல் சாசனச் சட்டம் 142 - ஆவது பிரிவின் கீழ் இத்தீர்ப்பை அளித்தது.

விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள், ''உச்ச நீதிமன்றம் இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்துவிட்டாலும், போபால் பெருநகர நீதிபதி தனக்குள்ள சட்டபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கைக் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் வழக்காக நடத்த வேண்டும்'' எனக் கோரி மனு தாக்கல் செய்தனர். போபால் பெருநகர நீதிபதி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியல் சாசனச் சட்டம் 142 - ஆவது பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, இம்மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டதோடு, விஷவாயு வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்றவாறே நடத்தி முடித்தார்.

அப்பொழுதே, தனது தீர்ப்பு கீழமை நீதிமன்றங்களின் விசாரணையைக் கட்டுப்படுத்தாது எனத் தெளிவுபடுத்த முன்வராத உச்ச நீதிமன்றம், தற்பொழுது இவ்வாதத்தை முன்வைப்பது அதனின் இரட்டை வேடத்தைத்தான் அம்பலப்படுத்திக் காட்டுகிறது. இந்தியக் குற்றவாளிகளுக்குக் குறைவான தண்டனை கிடைக்கக்கூடிய வகையில் வழக்கை மாற்றியமைத்து அளித்த தீர்ப்பைக் கைவிடவோ, மறுஆய்வுக்கு உட்படுத்தவோ மறுத்துவிட்ட உச்ச நீதிமன்றம், இந்த வாதத்தைத் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் உள்நோக்கத்தோடுதான் முன்வைத்திருக்கிறது.

உச்ச நீதிமன்றம், யூனியன் கார்பைடு மற்றும் அதனின் இந்தியக் கூட்டாளிகள் ஆகியோரின் கைக்கூலியாகத்தான் செயல்பட்டு வருகிறது என்பதற்கு, போபால் விஷவாயு படுகொலை வழக்கு தொடர்பாக அந்நீதிமன்றம் ஏற்கெனவே அளித்துள்ள பல தீர்ப்புகளே ஆதாரங்களாக உள்ளன. சி.பி.ஐ. காலதாமதமாக மறுசீராய்வு மனு தாக்கல் செய்ததைக் காரணமாகக் காட்டி, 1996-இல் அளிக்கப்பட்ட அநீதியான தீர்ப்பை மறுஆய்வுக்கு உட்படுத்த மறுத்துள்ள உச்ச நீதிமன்றம், இதன் மூலம் விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் அநீதி இழைத்திருக்கிறது என்பதே உண்மை.

● குப்பன்


உழைக்கும் மக்களுக்கான அரசியல் ஊழியர்கள் படிக்க வேண்டிய இரு நூல்கள்...



மாவோவின் மூன்று சொற்பொழிவுகள்

விலை: ரூ.10.00



ஐந்து அரங்குகளில் தேர்வை எதிர் கொள்வோம்

-சௌ என் லாய்

விலை: ரூ.10.00

நூலினை அஞ்சலில் பெற நூல் விலையுடன் ரூ.30 சேர்த்து பணவிடை அனுப்பவும்.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை- 600002. தொலைபேசி: 044-2841 2367




படிப்பகம்

www.padippakam.com

## புருலியா ஆயுதக் கடத்தல்:

# “ரா”வின் சதிச்செயல் அம்பலமாகியது

ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்பு - அதாவது, 1995 டிசம்பர் 17-ஆம் நாளன்று மே.வங்கத்தின் புருலியா மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் விமானத்தின் வழியே பாராசூட் மூலம் ஒரு மர்ம கும்பலால் பெட்டி பெட்டியாக நள்ளிரவில் ஆயுதங்கள் போடப்பட்டன. ஏகே-47, ஏகே-56 ரக அதிநவீன துப்பாக்கிகள், கைத்துப் பாக்கிகள், ஏவுகணைத் தாங்கிகள், டாங்கி எதிர்ப்புக் குண்டுகள், கையெறி குண்டுகள் மற்றும் பிற போர்க் கருவிகள் கிராமங்களில் விழுந்து நாடெங்கும் இச்சம் பவம் பரபரப்பானதால், மையப் புலனாய்வுத் துறை மூலம் விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டது. பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் சதி என்றும், மே.வங்கத்தில் இயங்கிய ஆனந்தமார்கி பயங்கரவாத கும்பலுக்கு வந்த இரகசிய ஆயுதங்கள் என்றும் பல வாறாக கூச்சல் போட்டது, அன்றைய நரசிம்மராவ் அரசு.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இருந்த லாட் வியா நாட்டைச் சேர்ந்த இந்த விமானத்திலிருந்து ஆயு தங்கள் இரகசியமாகப் போடப்பட்டுள்ளன. பாகிஸ் தானிலிருந்து டிசம்பர் 17 அன்று பிற்பகலில் புறப்பட்ட இந்த விமானம், அன்று மாலையில் வாரணாசியில் தரையிறங்கி, பின்னர் இரவு 10 மணியளவில் கொல்கத் தாவுக்குப் புறப்பட்டுச் சென்றபோது, இடையில் புரு லியாவில் ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சென் றுள்ளது. பின்னர் இந்த விமானம், டிசம்பர் 18 அன்று கொல்கத்தாவிலிருந்து தாய்லாந்திலுள்ள புகேட் நக ருக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு டிசம் பர் 21 அன்று சென்னையில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு நள்ளிரவில் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்ற போதுதான், நடுவானில் இந்த விமானத்துக்கு எச்சரிக்கை தரப்பட்டு இந்திய அரசால் கட்டாய மாக மும்பையில் தரையிறக்கப்பட்டது.

விமானத்திலிருந்த இக்குற்றக் கும்பலின் முக்கிய புள்ளியான டென்மார்க் நாட்டைச் சேர்ந்த கிம் டேவி என்பவன், தரையிறக்கியதற் கான கட்டணத்தை விமான நிலைய அதிகாரி களிடம் செலுத்திவிட்டு வருவதாகக் கூறிவிட்டு தப்பியோடிவிட்டான். விமானத்திலிருந்த பிரிட் டனைச் சேர்ந்த பீட்டர் பிளீச், மற்றும் 5 லாட் விய நாட்டினர் கைது செய்யப்பட்டனர். இந்த விமானம் இந்தியாவில் பறக்க அனுமதி பெற்றுத் தந்த டெல்லியில் தனியார் சரக்கு விமான நிறுவனத்தை நடத்திவந்த வர்த்தகர்கள், அந்நிய நிதியுதவி பெற்று இயங்கிவந்த மத வெறி பயங்கரவாத அமைப்பான மே.வங்கத் தின் ஆனந்தமார்கி இயக்கத்தினர் உள்ளிட்டு 16 பேர் மீது மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்தது.

2000-வது ஆண்டு பிப்ரவரியில், இந்த வழக்கின் மீதான விசாரணை முடிந்து, கைது செய்யப்பட்ட பீட்டர் பிளீச் மற்றும் 5 லாட்விய நாட்டினருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர்,ரஷ்ய வல்லர சின் நிர்ப்பந்தம் காரணமாக பயங்கரவாதச் சதிக்குற்றம் சாட்டப்பட்ட 5 லாட்வியர்கள் அரசுத் தலைவரால் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட் டனர். அதன் பிறகு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிர்ப் பந்தம் காரணமாக 2004-இல் பீட்டர் பிளீச் விடுவிக்கப் பட்டான். தப்பியோடித் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்பட்ட கிம் டேவி, 2001-ஆம் ஆண்டில் டென் மார்க் ஆட்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டான். இருப்பினும்,மைய அரசு அவனை இந்தியாவிடம் ஒப் படைக்கக் கோரி உருப்படியாக எந்த முயற்சியும் எடுக் கவில்லை. மிகத் தாமதமாக மையப் புலனாய்வுத் துறை டென்மார்க் அரசிடம் தாக்கீது செய்த பிறகு, ஆயு தங்கள் போட்டதில் தொடர்பு உள்ளதாக இந்திய நீதி மன்றத்தில் தீர்ப்பு எழுதப்பட்டால், குற்றம் சாட்டப் பட்ட கிம் டேவிக்கு மரண தண்டனை அளிக்கக் கூடாது என்று டென்மார்க் அரசு நிபந்தனை விதித்தது.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் கிம் டேவி, காங்கிரசு அரசுக்கும் இந்திய உளவு நிறுவனமான ‘‘ரா’’ வுக்கும் தெரிந்தேதான், அவற்றின் ஒப்புதலோடுதான்ஆயுதங் கள் போடப்பட்டதாக வெளிப்படையாக அறிவித் துள்ளான் . மும்பை விமான நிலையத்திலிருந்து தப் பித்து நேபாளம் வழியாக டென்மார்க் சென்றதாகவும், சில அதிகாரிகள் இதற்கு உதவியதாகவும் கூறி

புருலியாவில் மர்மக் கும்பலால் போடப்பட்ட ஆயுதங்கள்.





படிப்பகம்

www.padippakam.com

யுள்ளான். சில இந்திய உளவுத்துறை அதிகாரிகள் இந்த ஆயுதங்கள் போடும் விவகாரத்தில் உடந்தையாக இருந்து, பின்னர் அதை மூடிமறைக்கத் துணையாக இருந்ததாக பீட்டர் பிளீச்சும் தெரிவித்துள்ளான். இருப்பினும், இவையனைத்தும் பொய்கள் என்று இந்திய உளவுத்துறை அமைப்பான ''ரா'' மறுக்கிறது.



கிம் டேவி மற்றும் பீட்டர் பிளீச்.

ஆனால், கராச்சியில் இந்த விமானம் நின்றிருந்த போதே சர்வதேச போலீசு அமைப்பு (இன்டர்போல்) மூலம் இந்திய உளவு நிறுவனங்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ள போதிலும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வாரணாசி மற்றும் கொல்கத்தா விமான நிலைய ரேடார் திரையில் இந்த விமானம் மறைந்து போனது பற்றி விமான நிலைய அதிகாரிகள் கேள்வி எழுப்பவில்லை. மும்பை விமான நிலையத்திலிருந்து கிம் டேவி எப்படித் தப்பித்தான் என்பதைப் பற்றி இன்றுவரை மைய அரசு வாய்திறக்க மறுக்கிறது.

- இவையனைத்தும் புருலியா ஆயுத நடவடிக்கையை ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கம் மற்றும் உளவுத்துறையின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் ஒருக்காலும் நடத்தியிருக்கவே முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்திய உளவு நிறுவனமான ''ரா'', அனைத்துலகக் கிரிமினல் குற்றக் கும்பல்களின் துணையோடு, இந்தியாவில் ஏதொவொரு துரோக-கைக்கூலி அமைப்புக்கு ஆயுதங்களைக் கொடுத்து பயங்கரவாதத்தைத் தூண்டி விடுவது, பின்னர் ஆயுதங்களைக் கைப்பற்றுவதாக நாடகமாடுவது, அந்நிய சதி - நாட்டுக்குப் பேராபத்து என்று பீதியூட்டி, அம்மாநிலங்களில் நிரந்தரமாக இராணுவத்தை நிறுத்தி அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது என்கிற சதியின் ஒரு அங்கம்தான் இது என்று சந்தேகிக்க காரணங்கள் வலுவாகவே உள்ளன.

**நாடாளுமன்றத்துக்கோ, நாட்டு மக்களுக்கோ தெரியாமல் பயங்கரவாதச் சதிகளில் ஈடுபட்டுவரும் இந்திய அரசு மற்றும் உளவுத்துறை அமைப்புகளால்தான் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது.**

அன்று, அசாமில் போடோ இன மக்களின் போராட்டத்தை பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டு அங்கு அரசு பயங்கரவாத ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் ''ரா'' இச்சதியை செய்திருக்கலாம். அல்லது, வடகிழக்கு மாநிலங்களில் ஏதோவொரு பயங்கரவாதச் சதியை அரங்கேற்றி நிரந்தரமாக இராணுவ ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் இரகசியமாக ஆயுதங்களை இறக்கியிருக்கலாம். இரகசியமான இடத்தில் ஆயுதங்களைப் போடுவதற்குப் பதிலாக, அக்குற்றக் கும்பல் தவறுதலாக கிராமங்களில் போட்டு இந்த விவகாரம் வெளியே தெரிந்து விட்டதால், வேறு வழியின்றி விசாரணை நாடகமாடி குற்றவாளிகளைத் தப்புவிக்க ஏற்பாடுகள் நடந்துள்ளதையே கடந்த 15 ஆண்டுகால இழுத்தடிப்பு நிரூபிக்கிறது. டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் கிம்டேவி வெளிப்படையாக இருந்தபோதிலும், அவனைத் தேடிக் கண்டுபிடிப்பதாகக் கூறிக் கொண்டு உளவுத்துறை உல்லாச சுற்றுலா போய்க்கொண்டு மக்களின் வரிப் பணத்தைத் தின்று கொழுப்பதுதான் நடந்துள்ளது. கிம் டேவியை இந்தியாவுக்குக் கொண்டுவர டென்மார்க் நீதிமன்றத்தில் காலாவதியாகிப்போன கைது ஆணையை சி.பி.ஐ. தாக்கல் செய்த முட்டாள்தனம் அம்பலமாகி, பின்னர் கொல்கத்தாவிலிருந்து இப்போது புதிய ஆணையைப் பெற்று அதனை டென்மார்க் நீதி மன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. கடுமையாகவும் நுணுக்கமாகவும் துப்பறிந்து குற்றவாளிகளைக் கிடுக்கிப் பிடிபோட்டு மடக்கிப் பிடிப்பதாகச் சித்தரிக்கப்படும் இப்பேர்பட்ட சி.பி.ஐ.தான், 2-ஜி ஸ்பெக்ட்ரம், ஆதர்ஷ், காமன்வெல்த் விளையாட்டு ஊழல் முதலானவற்றை விசாரித்து வருகிறது . இதிலிருந்தே சி.பி.ஐ. விசாரணையின் யோக்கியதையைப் புரிந்து கொள்ள முடியும்.

அந்நிய சீர்குலைவு சக்திகளால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது என்று தொடர்ந்து கூப்பாடு போடுகிறது, இந்திய அரசு. உண்மையில், நாடாளுமன்றத்துக்கோ, நாட்டு மக்களுக்கோ தெரியாமல் பயங்கரவாதச் சதிகளில் ஈடுபட்டுவரும் இந்திய அரசு மற்றும் உளவுத்துறை அமைப்புகளால்தான் இந்தப் பேராபத்து ஏற்பட்டுள்ளது என்பதை புருலியா விவகாரம் நிரூபித்துக் காட்டுகிறது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com


# சிரிய மக்களின் போராட்டமும் அமெரிக்க ஓநாய்களின் அழுகையும்

**எகிப்து, துனிசியா போல சிரியாவிலும் தனக்கு முழு விசுவாசமான அடிவருடி ஆட்சியைத் திணிக்க முயலுகிறது, அமெரிக்கா.**

வறுமையும், வேலையின்மையும், விலைவாசி உயர்வும் ஏழை நாட்டு மக்களைப் பிடித்தாட்டும் இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில், அரசியல் மாற்றம் கோரும் மக்கள் போராட்டங்கள் பல நாடுகளில் வெடிக்கத் தொடங்கியுள்ளன. ஊழல் கறை படிந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், சர்வாதிகாரக் கொடுங்கோலர்களுக்கு எதிராகவும் சாமானிய மக்களின் எழுச்சியானது துனிசியா, எகிப்து என வட ஆப்பிரிக்க நாடுகளைத் தொடர்ந்து, தற்போது மேற்காசிய நாடான சிரியாவிலும் பரவத் தொடங்கியுள்ளது.

1970-ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியின் மூலம் பாத் கட்சியின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு, தன்னைச் சர்வாதிகாரியாக நிலைநிறுத்திக் கொண்ட ஹாபிஸ் அல் அசாத் காலத்திலிருந்து சிரியாவில் சர்வாதிகாரமும் கொடுங்கோலாட்சியும் தலைவிரித்தாடி வருகிறது. சிரியாவின் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் அழித்து ஒரு கட்சி ஆட்சியை நிறுவிய ஹாபிஸ் அல் அசாத், 30 ஆண்டுகள் சர்வாதிகாரியாக ஆட்சி செய்து விட்டு 2000-மாவது ஆண்டில் இறந்தார். அதையடுத்து அவரது மகன் பஷார் அல் அசாத், சிரியாவின் அதிபரானார்.

பஷார் அதிபரானதும் கொண்டுவரப்பட்ட சந்தைச் சீர்திருத்தங்கள், நாட்டில் ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரித்தன. நாட்டில் நடுத்தரவர்க்கமே இல்லை எனச் சொல்லும் அளவிற்கு நடுத்தரவர்க்கத்தின் பெரும்பான்மையினர் கூலித் தொழிலாளர்களின் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். படித்த இளைஞர்களில் 20 சதவீதம் பேருக்கு வேலையில்லை; வேலைக்குச் செல்பவர்களும் போதுமான சம்பளமின்றித் தடுமாறுகின்றனர். குடும்பத்தைக் காப்பாற்ற ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளில் சாமானிய மக்கள் ஈடுபடுவதென்பது, அங்கு சாதாரணம்.




இவையெல்லாம் போதாதென்று, விலைவாசியோ விண்ணை முட்டுகிறது. இறைச்சியும், பழங்களும் பெரும்பான்மை சிரிய மக்களுக்கு கைக்கெட்டாததாகி விட்டது. சிரியாவின் விவசாயத்தை சுதந்திரச் சந்தை சீரழித்துவிட்டது. உள்நாட்டில் உற்பத்தியாகும் தரமான பருத்தியும் கோதுமையும் மலிவு விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, தரம் குறைந்த பருத்தியும் கோதுமையும் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. உணவுப் பொருள் விலையேற்றமும், விவசாயத்தின் சீரழிவும் மக்கள் எழுச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது. இதனால்தான் பெருநகரங்களை விட விவசாயிகள் அதிகமுள்ள சிறுநகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் உழைக்கும் மக்களின் எழுச்சியும் போராட்டங்களும் தீவிரமாக நடக்கின்றன.

40 ஆண்டுகளுக்கும் மேலாக அவசரநிலை அமலில் இருப்பதால் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன. ஆட்சியாளர்களிடம் இலஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. பிறப்புச் சான்றிதழ் வாங்கக்கூட ஆயிரக்கணக்கில் இலஞ்சம் தர வேண்டியுள்ளது. யாரை வேண்டுமானாலும் கைது செய்ய, சித்திரவதை செய்ய வழிசெய்யும் சட்டங்களும், கைது செய்யப்பட்டவர் நிரபராதியாக இருப்பினும் ஆயிரக்கணக்கில் இலஞ்சம் கொடுத்தால்தான் வெளியே வரமுடியும் என்ற நிலையும் மக்களை வாட்டி வதைக்கின்றன.

அரசின் அடக்குமுறைக்கு அஞ்சி, துயரங்களைச் சகித்துக் கொண்டிருந்த சிரிய மக்களுக்கு, துனிசியாவிலும் எகிப்திலும் நடந்த மக்கள் எழுச்சிகள் பெரும் உத்வேகத்தைக் கொடுத்தன. கடந்த பிப்ரவரி மாதத்தில் மிகச் சிறிய அளவில் தொடங்கிய எதிர்ப்பியக்கம் மூன்று மாத காலத்தில் மிகப்பெரிய அளவில் நாடு முழுவதும் பரவிவிட்டது. அதிபர் பஷார் பதவி விலக வேண்டும், அவசர நிலை திரும்பப்பெறப்பட வேண்டும், சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவான 1973-



படிப்பகம்

www.padippakam.com

ஆம் வருடத்து அரசியல் சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் போராடி வருகின்றனர். இப்போராட்டங்களை பஷார் அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கிவருகிறது. தொலைவிலிருந்து குறிபார்த்துச் சுடும் 'ஸ்நைபர்' படையைக் கொண்டு முக்கிய தலைவர்களைச் சுட்டுக் கொல்கிறது. அது மட்டுமன்றி, இராணுவ டாங்கிகளையும் போராட்டக்காரர்கள் மீது ஏவி விட்டுள்ளது. இதுவரை 800-க்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 8000 பேர்களைக் காணவில்லை. இருந்தபோதிலும், மக்களின் எதிர்ப்பினைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறுகிறது.

இவ்வாறு சிரியாவில் மக்கள் போராட்டங்கள் தன்னெழுச்சியாகப் பெருகத் தொடங்கியதும், அமெரிக்கா அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. ஒருபுறம் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டே, பஷார் அரசுடன் இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது. புவியியல் ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மேற்காசியப் பகுதியில் சிரியாவின் பாத்திரம் கேந்திரமானது. இஸ்ரேல் -பாலஸ்தீனப் பிரச்சினை, லெபனான் பிரச்சினை போன்றவற்றில் சிரியா பெரிய அளவில் செல்வாக்கு செலுத்துகிறது. அதுமட்டுமன்றி, ஈரானின் முக்கிய நட்பு நாடாகவும் சிரியா விளங்குகிறது. ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற முக்கிய போராளி இயக்கங்களின் தலைமை சிரியாவிலிருந்துதான் இயங்கி வருகிறது. இதன் காரணமாக சிரியாவைத் தனது பிடிக்குள் வைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்புகிறது.



சிரியாவின் சர்வாதிகார அதிபர் பஷார் அல்-அசாத்.

அதுமட்டுமன்றி, சிரியாவில் தனியார்மயம் - தாராளமயத்தை மேலும் தீவிரமாக்கவும் அமெரிக்கா விரும்புகிறது. இவற்றை நிறைவேற்றிக்கொள்ள மக்கள் போராட்டங்களை பகடைக்காயாகப் பயன்படுத்திக்கொண்டு, அவற்றை ஆதரிப்பதுபோல நாடகமாடிய அமெரிக்கா அதிபர் பதவி விலக வேண்டுமென்று சிரியாவின் சர்வாதிகாரக் கும்பலை நிர்பந்தித்தது. ஒருகட்டத்தில் அமெரிக்காவின் புதிய நிர்பந்தங்களையும், தாராளமயத் திட்டங்களையும் விசுவாசமாகச் செயல்படுத்துவதாக பஷார் உறுதியளித்ததும், அவரை அமெரிக்கா முழுமையாக ஆதரித்தது. பஷார் அசாத்தை ''சீர்திருத்தவாதி'' எனப் புகழ்ந்தார், ஹிலாரி கிளிண்டன் . ''சிரிய அதிபர் ஜனநாயகத்தை நிலைநாட்டி விரிவுபடுத்த முன்வந்துள்ளதால், சிரியா மக்கள் தங்கள் போராட்டங்களை நிறுத்திக் கொள்ள வேண்டும்'' என்றும் அமெரிக்கா கூறியது. ஆனால், தற்போது சிரியாவின் சர்வாதிகார கும்பலுக்கும் அமெரிக்கா ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையிலான பேரம் படியாததால், சிரிய அதிபர் பஷார் ஜனநாயக வழியில் நாட்டை நடத்த வேண்டும், அல்லது பதவி விலக வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிரியாவில் தொடரும் பயங்கரவாத அடக்குமுறை (அனைத்துலக பொதுமன்னிப்புக் கழகம்(ஆம்னஸ்டி) வெளியிட்டுள்ள புகைப்படம்) . அடக்குமுறைக்கு எதிரான சிரிய மக்களின் போராட்டம். (கீழ்படம்)





தனக்கு விசுவாசமான ஏழை நாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்கள் மக்களைக் கொடுமைப்படுத்தி வந்த போதிலும், அவர்களை முட்டுக் கொடுத்து ஆதரித்து வந்த அமெரிக்கா, இன்று அச்சர்வாதிகாரிகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் தன்னெழுச்சியாகப் பெருகத் தொடங்கியதும், அதனைப் பயன்படுத்திக் கொண்டு தனது மேலாதிக்க நலனை நிலைநாட்டிக் கொள்ளத் துடிப்பதையே சிரிய விவகாரம் நிரூபித்துக் காட்டுகிறது. ஒருவேளை அமெரிக்காவிற்கு பஷார் பணிந்துபோகவில்லையென்றால் லிபியாவைப் போன்றே சிரியா மீதும் போர்த் தாக்குதல் நடத்தி 'ஜனநாயகத்தை' நிலைநாட்டும் கடமையை அமெரிக்கா செய்திருக்கக்கூடும்.

• அழகு



படிப்பகம்

www.padippakam.com

# “மதிப்பில்லாத சரக்குகள்!”

**சொந்த நாட்டிலும் வாழ முடியாமல், அகதிகளாய் ஐரோப்பாவிற்குள்ளும் நுழைய முடியாமல், மத்தியத்தரைக் கடலில் மிதந்தபடியே இறந்துபோகும் வட ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த கருப்பின மக்களின் துயரக்கதை.**

கடந்த மார்ச் மாதம் 25 - ஆம் தேதி 72 பேர் கொண்ட அகதிகள் குழு லிபியாவின் தலைநகர் திரிபோலியிலிருந்து ''பூலோக சொர்க்கமாம்'' ஐரோப்பாவை அடையும் நோக்கத்துடன் தமது கடல் பயணத்தைத் தொடங்கியது. 47 எத்தியோப்பியர்கள், 7 நைஜீரியர்கள், 7 எரிட்ரீயர்கள், 5 சூடானியர்கள் மற்றும் கானா நாட்டைச் சேர்ந்த 6 பேர் அடங்கிய இக்குழு மத்தியத் தரைக் கடலைக் கடந்து இத்தாலியைச் சேர்ந்த லம்பேடுஸா தீவை அடைந்து ஐரோப்பாவில் காலடி எடுத்துவைக்கத் திட்டமிட்டிருந்தது. எனினும், திரிபோலியை விட்டுக் கிளம்பிய சிறிது நேரத்திலேயே நடுக்கடலில் மாட்டிக் கொண்ட இக்குழுவினர், உடனடியாக செய்மதி தொலைபேசி மூலம் (சேட்டிலைட் போன் மூலம்) இத்தாலி கடற்படையினரிடம் உதவி கேட்டு தொடர்பு கொண்டுள்ளனர். கடலில் தத்தளித்த 16 நாட்களில் ஒருமுறை நேடோ போர்க் கப்பலுடனும், ராணுவ ஹெலிகாப்டருடனும் இவர்கள் தொடர்பு கொண்டு உதவி கேட்டு கூக்குரலிட்டுள்ளனர். ஆயினும், எந்த உதவியுமின்றி தாகத்திலும், பசியிலுமாக சிறுகச் சிறுக ஒவ்வொருவராக - பச்சிளம் குழந்தைகளையும், பெண்களையும் கொண்ட இக்குழுவினரில் 63 பேர் பரிதவித்துச் சாகவிடப்பட்டுள்ளனர்.

நாகரிக உலகின் மெத்தனம்: ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் கிடைக்காமல் லம்பேடுஸா துறைமுகத்தில் உணவும் குடிநீருமின்றிக் கப்பலில் தத்தளிக்கும் வட ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த அகதிகள்.



கடற்பரப்பில் ஆபத்தில் இருக்கும் எவருக்கும் உதவி செய்வது முதன்மையானதும், கட்டாயமானதும் ஆகும் என்று சர்வதேச கடல் சட்டவிதிகள் வலியுறுத்துகின்றன. இத்தாலி கடற்படையினரும், நேடோ படையினரும் இச்சர்வதேச சட்டவிதிகளை வேண்டுமென்றே காற்றில் பறக்கவிட்டுள்ளனர். இந்த 63 அகதிகள் நடுக்கடலில் பரிதாபகரமான இறந்து போயிருப்பது தனிப்பட்ட சம்பவம் அல்ல. துனிசியா, லிபியா நாடுகளில் நடக்கும் அரசு எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாகவும், அமெரிக்க-ஐரோப்பிய அரசுகளின் இராணுவத் தலையீடுகள் காரணமாகவும் வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது நாடுகளிலிருந்து அகதிகளாக வெளியேறி, கடல் வழியே உயிரையே பணயம் வைத்து ஐரோப்பாவிற்குச் செல்லத் துணிகிறார்கள். கடந்த நான்கு மாதங்களில் ஏறத்தாழ 30,000 பேர் மத்தியதரைக் கடலை கடந்து ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்றுள்ளனர். இந்த அபாயகரமான பயணத்தில் பலர் நடுக்கடலிலேயே இறந்து போய்விடுகின்றனர். குறிப்பாக, கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் வட ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 800 பேர் லிபியாவிலிருந்து கடலைக் கடந்து ஐரோப்பாவிற்குச் செல்ல முயன்றதாகவும், எனினும் அவர்கள் அனைவருமே ஐரோப்பாவிற்குள் நுழைய முடியாமல், நடுக்கடலிலேயே பரிதவித்து இறந்து போயிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. கடலைக் கடப்பவர்களில் 10% பேர் இவ்வாறு சாகடிக்கப்படுவதாக ஐ.நா. மன்றத்தின் புள்ளிவிவரக் கணக்கு காட்டுகிறது.

லிபியா மீது ஏகாதிபத்திய நாடுகள் தொடுத்துள்ள போரின் உடனடி விளைவாக, அந்நாட்டிலுள்ள வறிய உழைப்பாளர்களான கறுப்பின மக்கள் இன வெறி தாக்குதலாலும், வேலையின்மையாலும் தமது வாழ்வை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். வட ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலையின்மையின் பலன்களை நக்கிப் பருகப் போட்டி போடும் ஐரோப்பிய நாடுகள், அதன் உடன் விளைவாக நிகழும் இவ்



படிப்பகம்


www.padippakam.com

வகதிகளின் வெளியேற்றத்திற்குப் பொறுப்பேற்பதில்லை. ஐரோப்பாவின் கொழுத்த பணக்கார நாடுகள் அனைத்தும் அகதிகளை உள்ளே நுழைய விடாமல் தமது கதவை இழுத்து அறைந்து சாத்துகின்றன. லிபியாவிலிருந்து வெளியேறும் அகதிகள் இத்தாலியின் லம்பேடுஸா வழியாகவும், பிரான்சின் காலாய்ஸ் நகரம் வழியாகவும் ஐரோப்பாவுக்குள் நுழைகிறார்கள். இப்பயணத்தின்போது இறந்து போகாமல் தப்பும் ''அதிருஷ்டக் கட்டைகள்'' அகதிகளாக காலாய்ஸ் நகரின் எல்லையில் கடும் குளிரில் தத்தளிக்கின்றனர். எந்த அடிப்படை வசதியுமற்ற வெட்டவெளி நரகமான இம்முகாமிற்கு ''ஆப்பிரிக்க வீடு'' என்று நயமாகப் பெயர் சூட்டியுள்ளது, ஐரோப்பிய 'நாகரிக'ச் சமூகம்.

அகதிகளைக் கையாளும் சுமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பிரான்சும் இத்தாலியும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டதால், அகதிகளைச் சித்திரவதை செய்து பிற ஐரோப்பிய நாடுகளுக்கு விரட்டிவிடும் வேலையைச் செய்கின்றன, இந்நாட்டு அரசுப் படைகள். தினசரி 'ரெய்டு'கள் நடத்துவது, குளிர் காயும் போர்வைகளிலும், சமைத்த உணவுகளிலும் தண்ணீரை ஊற்றி வீணாக்குவது, கைது செய்து எல்லையில் கொண்டு போய் விட்டுவிடுவதன் மூலம் முகாமிற்கு மீண்டும் நடக்க விடுவது - என்பன இச்சித்திரவதைகளில் சில.

''ஐரோப்பா என்றாலே மனித உரிமைகள் மிகவும் மதிக்கப்படும் என்று நான் நினைத்தது பொய். பிரிட்டனும், பிரான்சும் லிபியா மீது போட்ட குண்டுகளால்தான் நாங்கள் வெளியேறினோம். பிறகு, ஏன் எங்களை இவ்வளவு கொடூரமாக நடத்துகிறார்கள்?'' என்று கேட்கிறாள், 8 வயது சிறுமியான டெரெபா கிரோவ். ''லிபியாவில் வாழ்வது விருப்பமானதாக இல்லையெனினும், வாழ்க்கை என்ற ஒன்றாவது அங்கு இருந்தது. ஆனால், போர் தொடங்கியவுடன் லிபியக் கொடுமையிலிருந்து தப்பி ஐரோப்பியக் கொடுமையில் மாட்டிக் கொண்டோம்'' என்கிறார், 17 வயதான செனேய்.

மத்தியத்தரைக் கடலில் பரிதவித்து மாண்டுபோன 63 பேரின் சாவுக்குக் காரணமானவர்களைத் தண்டனையிலிருந்து தப்பவிடக் கூடாது என்கிறார், அகதிகளைக் கையாளும் ஐ.நா. நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளரான லரா போல்டிரினி. மாண்டுபோன அகதிகளுடன் கடைசி நிமிடங்களில் தொடர்பு கொண்டவரும், ரோம் நகரில் அகதிகள் உரிமைக்கான அமைப்பை நடத்தி வருபவருமான பாதிரியார் மோசஸ் செராய், குழந்தைகளையும் பெண்களையும் கொன்ற இக்கிரிமினல் செயல் தண்டிக்கப்பட்டே தீர வேண்டும் என்கிறார்.




கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையிலிருந்து தப்பி, எரியும் அடுப்பில் விழுந்த அவலம்: ஐரோப்பாவில் அடைக்கலம் கோரி பிரான்சு நாட்டின் காலாய்ஸ் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் வட ஆப்பிரிக்க நாடுகளின் அகதிகள். வெள்ளை இனவெறியர்களால் தாக்கப்பட்ட அவர்களைக் கைது செய்யும் போலீசு.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் உன்னதத்திற்கு உதாரணமாகக் காட்டப்படுகின்றன, மேற்கு ஐரோப்பிய நாடுகள். மனித நாகரிகமும், மனிதாபிமானமும், மனித உரிமைகளும் உயிரினும் மேலாக இந்நாடுகளில் மதிக்கப்படுவதாக பரவலானதொரு மூடநம்பிக்கை உள்ளது. ஆனால், இந்தப் பிரமைகளை உடைத்தெறிகின்ற ரத்தமும் சதையுமான உண்மைகளை வட ஆப்பிரக்க நாடுகளிலிருந்து வெளியேறியுள்ள அகதிகளின் கதைகள் சொல்லுகின்றன. ஜனநாயகத்தை காப்பது, மக்களைக் காப்பது என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் நடத்தும் போர்களின் உண்மையான நோக்கம் என்னவென்பதையும் இப்படுகொலைகள் காட்டுகின்றன. லிபியா மீது தொடுக்கப்பட்டுள்ள போருக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா வைத்துள்ள பெயர் - ''விடியலுக்கான நீண்ட பயணம்'' (ஆபரேசன் ஒடிசி டான்). விடியலுக்கான நீண்ட பயணத்தின் முடிவில் லிபியாவிலிருந்து கிளம்பிய அகதிகள் சந்தித்ததோ இன்னொரு நரகம். அமெரிக்க-ஐரோப்பிய கூட்டு நரகமே அது!

● அப்துல்



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய நீதிமன்றங்கள்:

# கார்ப்பரேட் பயங்கரவாதிகளின் அடியார்கள்!

''கார்ப்பரேட் தொழிற்கழகங்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் வழக்குகள்'' என்ற தலைப்பில் பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, கோவாவில் உள்ள பஞ்ஜிம் நகரில் கடந்த பிப்ரவரி மாதம் கருத்தரங்கமொன்றை நடத்தின. கார்ப்பரேட் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போவது ஒருபுறமிருக்க, இது தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்களின் மனப்பாங்கும் மாறிப் போய்விட்டிருப்பது குறித்தும் இக்கருத்தரங்கில் சுட்டிக் காட்டப்பட்டது.

பெரும் தொழில் அதிபர்கள் பல்வேறுவிதமான நிதி மோசடிகளில் ஈடுபடுவது மட்டும் கார்ப்பரேட் குற்றமல்ல; இயற்கை கனிம வளங்களை எவ்வித வரைமுறையுமின்றிச் சூறையாடுவது; காற்று, நீர், நிலம் ஆகியவற்றை நச்சுப்படுத்தி சுற்றுச்சூழலை நாசப்படுத்துவது, விவசாயம் முதலிய பாரம்பரியத் தொழில்களை அழித்து மக்களின் வாழ்வாதாரங்களைப் பறிப்பது; இவற்றின் மூலம் மக்களைக் கொத்துக்கொத்தாகச் சாகடிப்பது, உயிருக்கே உலை வைக்கும் நோய்களில் தள்ளுவது; இதற்காக அரசியல் - பொருளாதார கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுவது; தொழிற்சங்க உரிமைகளை மறுத்துத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக மாற்றுவது; இந்த அநீதிக்கு எதிராகப் போராட முன்வரும் தொழிலாளர்களைக் கொலைக்குழுக்களை ஏவிப் படுகொலை செய்வது என இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான் கார்ப்பரேட் குற்றங்கள் எனப்படும் கார்ப்பரேட் பயங்கரவாதம்.

நில அபகரிப்புக்கு எதிரான உ.பி.விவசாயிகளின் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் காயமடைந்த விவசாயி.



இந்தியாவிலேயே தமிழகம் தொழிற்துறை வளர்ச்சியில் முதல் மூன்று இடங்களில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், இந்த 'வளர்ச்சியை'ச் சுற்றுச்சூழலை அழித்துதான் தமிழகம் அடைந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள மிக முக்கியமான, மிகப்பெரிய 88 தொழிற்பேட்டைகள் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தியிருக்கும் கேடுகள் குறித்து ஆராய்ந்த மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் துறை, அப்புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தமிழகத்தின் வேலூருக்கு எட்டாவது இடத்தையும், கடலூருக்கு பதினாறாவது இடத்தையும், மணலிக்கு இருபதாவது இடத்தையும், கோயம்புத்தூருக்கு 34-ஆவது இடத்தையும், திருப்பூருக்கு 51-ஆவது இடத்தையும், மேட்டூருக்கு 58-ஆவது இடத்தையும், ஈரோடுக்கு 78-ஆவது இடத்தையும் அளித்திருக்கிறது.

''கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் இயங்கி வரும் 31 இரசாயன ஆலைகளில் 20 ஆலைகள் முறையான உரிமம் பெறாமல் சட்டவிரோதமாக இயங்கிவருவதையும், குறிப்பாக ஜனவரி 2010 முதல் நவம்பர் 2010-க்குள் மட்டும் இவ்வாலைகள் 130 முறை சுற்றுப்புறச் சூழல் விதிமுறைகளை மீறியிருப்பதையும்'' சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்தியாவெங்கும் சுற்றுப்புறச் சூழலுக்கு நாள்தோறும் ஏற்படுத்திவரும் கேடுகளுக்கு கடலூர் ஒரு சிறிய உதாரணம்தான்.

கார்ப்பரேட் நிறுவனங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படுத்திவரும் கேடுகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள், வழக்கை நீர்த்துப் போகச் செய்து, குற்றவாளிகளைத் தப்பவிடுவதில் காட்டும் அக்கறைக்கு போபால் விஷவாயு படுகொலை வழக்கு, கோக்கிற்கு எதிராக கேரளாவிலுள்ள பிளாச்சிமடா கிராம மக்கள் தொடுத்த வழக்கு எனப் பல வழக்குகளை உதாரணமாகக் காட்டலாம். சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும் நச்சு ஆலைகளுக்கு எதிராக மாசு கட்டுப்பாடு வாரியம் தப்பித்தவறி நடவடிக்கை எடுத்தால், அதனை நீதிமன்றங்கள் ரத்து செய்வதும்; அப்படிபட்ட நச்சு ஆலைகளுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அதிகார வர்க்கம் அத்தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்காமல், அந்நச்சு ஆலைகளுக்குச் சாதகமாக நடந்து வருவதற்கும் ஏராளமான வழக்குகளை உதாரணங்களாகக் காட்டலாம்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு எதிரான வழக்கு, கங்கை நதியை மாசுபடுத்தும் ஆலைகளுக்கு எதிரான வழக்கு, ஒலியம் நச்சுவாயு கசிவு வழக்கு உள்ளிட்ட பல வழக்குகளில் அதிகார வர்க்கம் நீதி மன்றத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைக் காமல், கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாக நடந்து கொண்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் கடலூர் - சிப்காட் தொழிற் பேட்டையில் அமைந்துள்ள ஷாஸன் இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து புரோமின் என்ற வாயு கசிந் ததையடுத்து, அத்தொழிற்சாலைக்கு அருகே அமைந் துள்ள குடிகாடு, ஈச்சங்காடு உள்ளிட்ட மூன்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வசித்துவந்த 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இவ் வாயுவைச் சுவாசிக்க நேர்ந்ததால் வாந்தியெடுத்து மயக்கமுற்ற 100-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாயு கசிவு தொடர் பாக விசாரணை நடத்த வேண்டும் எனக் கிராம மக்கள் போராடியதையடுத்து, அவ்வாலை இயங்குவதைத் தற் காலிகமாகத் தடை செய்த தமிழக அரசு, விசாரணை கமிசன் ஒன்றையும் அமைத்தது. எனினும், இவ்விசா ரணை முடிவதற்கு முன்பாகவே, அவ்வாலை நிர் வாகம் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தமிழக அரசு விதித்த தற்காலிகத் தடையை ரத்து செய்து, ஆலை இயங்குவதற்குச் சாதக மாகத் தீர்ப்பைப் பெற்றது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் தொடங்கும் திட்டங் களுக்கு எதிராகப் பொது நல வழக்குத் தாக்கல் செய் யப்படும்பொழுது, நீதிமன்றங்கள் அவ்வழக்கை யொட்டி அத்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்குத் தற்காலிகத் தடை விதிப்பது வழக்கம். ''இப் பொது நல வழக்குகள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்படுமானால், அத்திட்டத்தை நிறுத்தி வைத்த தால் ஏற்படும் நட்டமனைத்தையும் பொது நல வழக்கைத் தாக்கல் செய்தவர்கள் செலுத்த வேண்டும்'' என்று நீதிமன்றம் இப்பொழுது அறிவுறுத்தத் தொடங்கியிருக்கிறது. மேலும், பொது நல வழக்கு தாக்கல் செய்பவர்களின் நன்னடத்தையைக் கேள்விக் குள்ளாக்கும் விதமாக, நீதிமன்றங்களில் சுற்றுச்சூழல் தொடர்பாகப் பொது நல வழக்கு தாக்கல் செய்வதற்கு அதிக நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்றும் நீதித்துறை ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் வியாபார நலன்களுக்கு எதிராக யாரும் வழக்குத் தொடுக்கக் கூடாது என் பதைத்தான் நீதிமன்றம் இப்படிச் சுற்றி வளைத்துக் கூறி யிருக்கிறது.

நீதிமன்றங்கள் மட்டுமல்ல, அமைச்சரவை தொடங்கி அரசு இயந்திரத்தின் அனைத்து உறுப்பு களும் இக்கார்ப்பரேட் பயங்கரவாதத்திற்குத் துணை நிற்கின்றன என்பதோடு, அக்குற்றங்களைச் சட்டபூர்வ




சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் ஷாஸன் இரசாயன ஆலையை மூடக்கோரி கடலூர் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

மாக்கும்விதமாக சட்டங்களையும், கொள்கை களையும் வகுத்து வருகின்றன. குறிப்பாக, ஜெய்ராம் ரமேஷ் தலைமையில் உள்ள சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் கார்ப்பரேட் நிறுவனங்களின் எடுபிடியாக நடந்துவருவதற்கு போஸ்கோ, நியம்கிரி - வேதாந்தா, ஜெய்தாபூர் அணுஉலைத் திட்டம், மரபீணி மாற்றுப் பயிர்களுக்கு அனுமதி அளித்தது உள்ளிட்ட ஏராள மான வழக்குகள் ஆதாரங்களாக உள்ளன.

மீனா குப்தா என்பவர் சுற்றுப்புறச் சூழல் அமைச்ச கத்தின் செயலராக இருந்தபொழுதுதான் போஸ்கோ விற்குத் தேவைப்பட்ட அனைத்து அனுமதிகளும் வாரி வழங்கப்பட்டன. அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிகள் அனைத்தும் சட்டப்பூர்வமாக வழங்கப் பட்டுள்ளதா என்பதை ஆராய ஜெய்ராம் ரமேஷ் கமிட்டியொன்றை அமைத்தபொழுது, அக் கமிட்டியின் தலைவராக மீனா குப்தாவையே நிய மித்தார். ஜெய்ராம் ரமேஷின் கயமைத்தனத்தை நிரூபிப்பதற்கு இந்த ஒரு சான்றே போதுமானது.

ஜெய்தாபூர் அணு உலைத் திட்டம் குறித்து முன்னாள் டெல்லி உயர்நீதி மன்ற நீதிபதி ஏ.பி. ஷா தலைமையில் நடந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் உரையாற்றிய கொங்கன் பாதுகாப்பு சமிதி என்ற அமைப்பைச் சேர்ந்த விவேக் மாண்டீரோ, ''இந்த அணு உலைத் திட்டத்தில் பயன்படுத்தப்படும் எரி பொருட்களை அடுத்த 2.5 இலட்சம் ஆண்டுகளுக்குப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க வேண்டும். ஆனால், இத்திட்டம் குறித்து சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் தயாரித்துள்ள சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு குறித்த மதிப் பீட்டு அறிக்கையில் இப்பாதுகாப்பு குறித்து ஒரு வார்த்தைகூட இல்லை'' என்ற உண்மையை அம்பலப் படுத்தியுள்ளார்.

கார்ப்பரேட் நிறுவனங்கள் செயல்படுத்த முனை யும் மிகப் பெரும் திட்டங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து அரசின் நிபுணர்கள்



படிப்பகம்

www.padippakam.com

அளிக்கும் அறிக்கை என்பது, அத்திட்டம் குறித்து கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது இணைய தளங்களின் வெளியிடும் அறிக்கையின் அப்பட்டமான பிரதி தவிர வேறில்லை. குறிப்பாக, போஸ்கோ திட்டத்தால் கிடைக்கும் சமூக நலன்களை ஆராய்ந்த பயன்பாட்டு பொருளாதரா ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் என்ற அமைப்பு அளித்த அறிக்கை, போஸ்கோ நிறுவனத்திடம் காசு வாங்கிக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை என்ற உண்மையை சுரங்கப் பகுதி மக்கள் ஒற்றுமை இயக்கம் அம்பலப்படுத்தியது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது திட்டங்கள் குறித்த கவர்ச்சிகரமான சித்திரத்தை அமைச்சர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் மத்தியில் உருவாக்குவதற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், பன்னாட்டு ஆலோசனைக் கழங்களையும் இறக்கிவிடுகின்றன. போஸ்கோ திட்டம் அப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்தவுள்ள நன்மைகளை எடுத்துச் சொல்வதற்காக, ''இண்டர்நேஷனல் வாட்ச்'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டு, அதற்கு கமிஷனாக 22 கோடி ரூபாய் தரப்பட்டது. வேதாந்தா நிறுவனம் தனது பாக்சைட் திட்டத்தால் விளையும் நன்மைகள் குறித்து எடுத்துச் சொல்ல ''வளர்ச்சிக்கான வியாபாரக் கூட்டாளிகள்'' என்ற அரசுசாரா நிறுவனத்தை ஈடுபடுத்தியது.

சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், போஸ்கோ, வேதாந்தா, மகேஷ்வர் அணைக் கட்டுத் திட்டம், ஜெய்தாபூர் அணுஉலைத் திட்டம் உள்ளிட்ட பல கார்ப்பரேட் தொழில்களுக்கு, சுற்றுப்புறச் சூழல் ஆய்வின் அடிப்படையில் அனுமதி கொடுக்கவில்லை. ஏகாதிபத்திய நிறுவனங்களின் நலன்களை முன்னிறுத்தியே அனுமதியை வழங்கிவிட்டு, தனது இந்த அடிவருடித்தனத்தை மூடிமறைக்க, ''கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்'', ''வளர்ச்சிக்கான திட்டம்'' போன்ற சொல் அலங்காரங்களைப் பயன்படுத்தி வருகிறார். இதனை அம்பலப்படுத்திப் போராடியதற்காகவே போஸ்கோ ப்ரதிரோத் சங்க்ராம் சமிதியின் தலைவர் அபயா ஸாஹூ மற்றும் அவ்வமைப்பைச் சேர்ந்த பலர் மீதும் 33 பொய் வழக்குகள் போடபப்பட்டுள்ளன.

கார்ப்பரேட் நிறுவனங்கள் நடத்தும் நிலக் கொள்ளையும் இந்த வகையில்தான் நியாயப்படுத்தப்படுகிறது. கடந்த மே மாதம் 7-ஆம் தேதியன்று உ.பி. மாநிலத்திலுள்ள பட்டா, பர்சவுல் என்ற இரு கிராமப் புறங்களைச் சேர்ந்த விவசாயிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 விவசாயிகள் கொல்லப்பட்டனர். அக்கிராம விவசாயிகள் அரசு கையகப்படுத்தும் தங்கள் நிலங்களுக்கு அதிக விலை கேட்டுப் போராடி வருவதாகப் பத்திரிகைகள் இது குறித்து செய்திகளை வெளியிட்டன. இது பாதி உண்மைதான்.

யமுனா விரைவுச் சாலையை அமைப்பது, அச்சாலையையொட்டி அதிஉயர் நகரங்களை அமைப்பது என்ற பெயரில் ஒரு பெரும் நிலக் கொள்ளையை




ஜெய்தாபூர் அணு உலைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதைக் கண்டித்து, ஜெய்ராம் ரமேஷை ''கெரோ'' செய்து போராடும் மும்பையைச் சேர்ந்த டாடா சமூக அறிவியல் கழக மாணவர்கள்.

ஜே.பி. இன்ஃப்ராடெக் என்ற தனியார் நிறுவனம் நடத்தி வருகிறது; அதற்கு உ.பி. மாநில அரசு கைத்தடியாகச் செயல்படுகிறது என்பதுதான் முழு உண்மை. இத்திட்டங்களுக்காக உ.பி. மாநில அரசின் மூலம் விவசாயிகளிடமிருந்து 880 ரூபாய்க்கு வாங்கப்படும் நிலம், அத்தனியார் நிறுவனம் அமைக்கவுள்ள அதி உயர் நகரங்களில் குடியிருக்க விண்ணப்பித்துள்ள மேட்டுக்குடி கும்பலிடம் 25,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த அதிஉயர் நகரங்கள் அமைக்கப்படுவதற்காக 374 கிராமங்களைச் சேர்நத ஏழு இலட்சம் விவசாயிகள் தங்கள் நிலங்களை இழந்து பிழைப்பு தேடி வெளியேற வேண்டியிருக்கும்; யமுனை விரைவுச் சாலையை அமைப்பதற்காக 43,000 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படுவதால், ஏறத்தாழ 1,191 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பாதிக்கப்படுவர். இந்தக் கொள்ளைக்கு எதிராகப் போராடும் விவசாயிகளை கிரிமினல் கும்பல் எனச் சாடி வருகிறார், தலித் சகோதரி மாயாவதி.

இந்தியப் பொருளாதாரம் குறித்து மைய அரசு நடத்திய ஆய்வின்படி, கடந்த 15 ஆண்டுகளில் ஏறத்தாழ 60 இலட்சம் ஹெக்டேர் நிலம் விவசாயிகளிடமிருந்து வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 'வளர்ச்சி'த் திட்டங்கள் அனைத்தும் நிலத்தை இழந்த விவசாயிகளை, வேலையிழந்த கூலி விவசாயிகளை உள்நாட்டிலேயே அகதிகளாக அலையவிட்டுள்ளது என்பதுதான் உண்மை. இந்த நில அபகரிப்புக்கு எதிராக விவசாயிகள் மத்தியில் எழுந்துவரும் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதற்காக, புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை உருவாக்கப் போவதாகக் கூறி வருகிறது, மைய அரசு. லோக்பால் சட்டம் அமலுக்கு வந்தால் கார்ப்பரேட் கொள்ளை ஒழிந்துவிடும் எனப் பிரச்சாரம் செய்யப்படுவது எவ்வளவு பெரிய மோசடியோ, அதைப் போன்ற இன்னொரு மோசடியாகவே இப்புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டமும் அமையும்!

● குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்க தொடர்ச்சி


விழுப்புரத்தில்...

பட்டுள்ள ஆட்சி மாற்றம் ஈழத் தமிழர் வாழ்வைப் பாதுகாத்துவிடாது என்பதையும் விளக்கி, இந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர். ஏகாதிபத்தியங்களின் கைப்பாவையான ஐ.நா.மன்றத்தின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி, உலக மக்கள் மத்தியில் பொதுக்கருத்தை உருவாக்கி மக்கள்திரள் இயக்கங்களைக் கட்டியமைப்பதன் மூலம்தான், உலகெங்குமுள்ள தமிழர்களும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு போராடுவதன் மூலம்தான் போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலைத் தண்டிக்க முடியும் என்பதை உணர்த்தினர்.

இறுதிக்கட்டப் போரின் போது மனித உரிமை அத்துமீறல்கள் நடந்துள்ளதாக இலங்கை அரசு மீது ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள போதிலும், இரத்தக் கறை படிந்த போர்க்குற்றவாளி ராஜபக்சேவுடன் இந்திய அரசு இன்னமும் கூடிக்குலாவுகிறது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையால் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலைச் சமாளிக்க இந்தியாவின் உதவி தேவைப்படுவதாகவும், அதற்கு இந்தியா உதவும் என்று நம்புவதாகவும் ராஜபக்சே கும்பல் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ''போர்க்குற்றவாளியான ராஜபக்சேவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவும், இலங்கை மீது பொருளாதாரத் தடையினைக் கொண்டுவரவும் மைய அரசை வலியுறுத்துவேன்'' என்று சவடால் அடிக்கிறார், ஆட்சியைப் பிடித்துள்ள ஜெயலலிதா. அவரது இச்சவடாலை நம்பி, ''தாங்கள் முதல்வராக இருந்த போதுதான் ஈழத் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டது'' என்று தமிழகத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். ராஜபக்சேவின் பிடியிலுள்ள புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளரான கே.பி. என்கிற குமரன் பத்மநாதன், ''தி.மு.க.வின் பிராமண எதிர்ப்புக் கொள்கையில் பிரபாகரன் ஈர்க்கப்பட்டதால், ராஜீவ் படுகொலை நடந்தது. ஜெயலலிதாவைக் கொல்வதற்கும் புலிகள் திட்டமிட்டிருந்தனர்'' என இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார். அதை வைத்து ஜெயலலிதாவும் ராஜீவ் கொலையில் தி.மு.க.வுக்குத் தொடர்பு உள்ளது என்று மீண்டும் சாமியாடக் கிளம்பியுள்ளார். ஒரு பிரிவு தமிழினவாதிகளோ, ஜெயலலிதாவை ஆதரித்து, தமிழக சட்டமன்றத் தேர்தலில் கருணாநிதி மற்றும் காங்கிரசு துரோகிகளை வீழ்த்தி பாடம் புகட்டி விட்டதாகப் பூரித்துப் போகின்றனர். இதர தமிழினக் குழுக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் போராட்டங்களுக்கு மேல் எதுவும் செய்யவில்லை. இத்தகைய கையாலாகாத, சந்தர்ப்பவாத- பிழைப்புவாதப் போக்குகளைத் திரைகிழித்து, இப்புரட்சிகர அமைப்புகள் உணர்வோடு நடத்திய இந்த ஆர்ப்பாட்டங்கள் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தின.


திருச்சியில்...



புதுச்சேரியில்...

– பு.ஜ. செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# குஜராத்தின் வளர்ச்சிக்குப் பலியாகும் பழங்குடியின மக்கள்

நரேந்திர மோடியின் ஆட்சியில் குஜராத் அடைந்துவரும் 'வளர்ச்சி' பற்றி பார்ப்பன - பாசிஸ்டுகள் மட்டுமல்ல, 'மதச் சார்பற்ற' முதலாளித்துவ பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதி வருகின்றன. இந்த 'வளர்ச்சி' தொழிலாளி வர்க்கத்துக்குத் தந்துள்ள பரிசு என்ன தெரியுமா? அகால மரணம்!

மத்தியப் பிரதேசத்திலுள்ள அலிராஜ்பூர், தார், ஜாபுவா ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்து, குஜராத்திலுள்ள கோத்ரா மற்றும் கேதா மாவட்டங்களுக்குச் சென்று, அம்மாவட்டங்களில் இயங்கி வரும் படிகக்கல் (Quartz) தொழிற்சாலைகளில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பும் பழங்குடியின மக்களை ''சிலிகோஸிஸ்'' என்ற ஆட்கொல்லி நோய் பிடித்தாட்டி வருகிறது.

''படிகக்கற்களை மாவு போல அரைத்து, அம்மாவைச் சாக்கு மூட்டைகளில் கட்டும் இந்த வேலை மிகவும் அபாயகரமானது; இந்த வேலையை ஒரு மூன்று மாதம் தொடங்கி ஒரு வருடம் வரை செய்தாலே போதும், திடகாத்திரமான தொழிலாளர்களைக் கூட இந்த நோய் தாக்கிவிடக் கூடும்'' எனத் தொழில்வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள்.

''இந்த நோய் தொற்றினால், மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்படும்; தொடர்ச்சியான இருமல் வாட்டியெடுக்கும்; உடல் எடை குறைந்து, நோஞ்சனாகி, நடக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டு, மரணத்திற்குள் தள்ளிவிடும்'' என மருத்துவர்கள் இந்த நோயின் கொடூரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

''இத்தொழிற்சாலைகளில் வேலை பார்த்துத் திரும்பியுள்ள எங்கள் ஆட்களில் ஒவ்வொருவருமே பையபைய, ஆனால் நிச்சயமாக இறந்து போவோம்; இதைத் தடுக்கும் ஆற்றலோ, பலமோ எங்களுக்கு இல்லை'' என உடைந்துபோன குரலில் கூறுகிறார், உந்திலி என்ற கிராமத்தைச் சேர்ந்த 45 வயதான புத்தா. இவரது 18 வயது மகன் மோகன் கடந்த ஆண்டுதான் இந்த நோய்க்குப் பலியானான்; இவரது 16 வயது மகள் கம்மா இந்த நோயினால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

அலிராஜ்பூர் மாவட்டத்தில் கடந்த 2010 - ஆம் ஆண்டில் மட்டும், படிகக்கல் தொழிற்சாலை வேலைக்குப் போய்விட்டுத் திரும்பிய பழங்குடியின மக்களுள் 277 பேர் இந்த நோய் தாக்கி இறந்து போய்விட்டதாக ம.பி. மாநில அரசே ஒப்புக் கொண்டுள்ளது. அலிராஜ்பூர், தார், ஜாபுவா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஏறத்தாழ 724 பேரை இந்த நோய் தாக்கியிருப்பதாகத் தன்னாவத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. அலிராஜ்பூர், தார் மாவட்டங்களிலுள்ள 10 கிராமங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் தமது தாய், தந்தை இருவரையும் இந்த நோய்க்குப் பலி கொடுத்துவிட்டு, அநாதைகளாகத் திரிந்து கொண்டிருப்பதாகவும் இத்தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

மத்தியப் பிரதேச மாநிலத்தின் இம்மூன்று மாவட்டங்களில் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டுவிட்டன. இன்று, குஜராத்திற்கு வேலை தேடிச் செல்வதைத் தவிர, பிழைப்பதற்கு அவர்களுக்கு வேறு வழியில்லை. பட்டினி கிடந்து சாவாதா அல்லது குஜராத்தின் படிகக்கல் தொழிற்சாலைகளில் வேலைக்குப் போய் இந்த ஆட்கொல்லி நோயைப் பெற்றுத் திரும்புவதா என்ற இரண்டு வாய்ப்புகள்தான் அவர்கள் முன் உள்ளன.

மத்தியப் பிரதேசத்தை ஆளும் பா.ஜ.க. கும்பல், இப்பழங்குடியின மக்களின் பிழைப்புக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வதைவிட, இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்துவதைத்தான் முக்கியமாகக் கருதுகிறது. நானோ கார் தொழிற்சாலையை குஜராத்திற்குக் கொண்டுவருவதற்காக பல நூறு கோடி ரூபாய்களை டாடாவிற்கு மானியமாகக் கொடுக்கத் தயங்காத மோடி, இப்பழங்குடியின மக்களுக்கு ஒரு நயா பைசா கூட நட்ட ஈடாகத் தர மறுக்கிறார். இப்பழங்குடியின மக்களின் சாவுகளுக்குக் காரணமான படிகக்கல் தொழிற்சாலை முதலாளிகளைத் தண்டிக்கக் கோரினால், குஜராத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும் எனப் பீதியைக் கிளப்பிவிடுகிறார்.

நரேந்திர மோடி, இந்து மதவெறி பயங்கரவாதி மட்டுமல்ல, அவனொரு முதலாளித்துவ பயங்கரவாதியும்கூட என்பதைத்தான் இப்பழங்குடியின மக்களின் பரிதாபச் சாவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிலிகோஸிஸ் நோய் தாக்கப்பட்ட ஒரே ஆண்டுக்குள் எழுந்து நடமுடியாத அளவிற்கு நோஞ்சானாகி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இருபது வயதான சானோ (இடது); அதே நோயினால் தாக்கப்பட்டுள்ள 16 வயதான கம்மா மற்றும் அவரது தந்தை புத்தா. (வலதுபடம்)



படிப்பகம்